இனி து ரகசியம் அல்ல!

ஜாதக நிலையில் இராஜயோகம் யாருக்கு இருக்கின்றதோ அவருக்குத்தான் அரச தலைவராகும் வாய்ப்புக் கிட்டும் என்பார்கள். அந்த இராஜயோகம் ரணிலுக்கு இல்லைப்போலும் .

கால் நூற்றாண்டுக்கு முன்னர் பிரதமர் பதவிக்கு வந்த அவர், கால் நூற்றாண்டுக்கு பக்கம் 02

பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | தை 16 | புதன்கிழமை 30.01.2019 | கதிர் 86

# அரசிலிருந்து விலக தயாராகும் தமிழ் முற்போக்குக் கூட்டணி!

## கூட்டு ஒப்பந்தம் ரணில் முன்பாக கைச்சாத்தானதால் கடும் அதிருப்தி

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசிலிருந்து மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி வெளியேறவேண்டும் என அந்தக் கட்சியின் தொண்டர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் அரசியல் உயர்பீடக் கூட்டம் நேற்று நுகேகொடையிலுள்ள அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது மேற்படி கோரிக்கை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. பக்கம் 11

## துப்பாக்கிச் சூட்டுக்குப் பயந்து கடலில் குதித்த இருவர் மாயம்!

### 12 கடற்படையினர் காயம் கிண்ணியாவில் பதற்றம்



திருமலை, ஜன. 30

கிண்ணியா கங்கைப் பாலம், கீரைத்தீவுப் பகுதியில் மண் அகழ்வில் ஈடுபட்ட இளைஞர்கள் மீது கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டை பக்கம் 11

## வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு அரசு தேவையான நிதி வழங்கும்

### பொதுநிர்வாக அமைச்சர் உறுதி

கொழும்பு, ஜன. 30

வரவு - செலவுத்திட்டத்தைஇலக்காகக்கொண்டு அரசு எதையும் செய்யவில்லை. எனினும், வடக்கு, கிழக்கி அபிவிருத்திக்கு அவசியமான நிதியை வழங்கு பக்கம் 11

## சவேந்திர சில்வாவுக்கு எதிரான போர்க்குற்ற ஆவணம் வெளியீடு

கொழும்பு, ஜன. 30

இலங்கை இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிரான போர்க் குற்றச் பக்கம் 11

## காங்கேசன்துறைக்கு வருகின்றார் ரணில்!

கொழும்பு, ஜன. 30

காங்கேசன்துறைத் துறைமுக அபிவிருத்தி வேலைத்திட்டத்தை துரிதப்படுத்துவதற்காகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15 ஆம் பக்கம் 11

## ஜூன் மாதத்துக்கு முன் மாகாண சபைத் தேர்தல்

### அமைச்சரவை ஒப்புதல்

கொழும்பு, ஜன. 30

மாகாண சபைகளுக்கான தேர்தலை எதிர்வரும் ஜூன் மாதத்துக்கு முன்னர் நடத்துவதற்கு அமைச்சரவை நேற்று அனுமதி வழங்கியது. பக்கம் 02

## பீல்ட் மார்ஷல் பட்டத்தை இழப்பாரா பொன்சேகா?

கொழும்பு,ஜன.30

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தொடர்ந்தும்தன்னைவிமர்சித்தால் அவரின் பீல்ட் மார்ஷல் பதவியை நீக்குவேன் என ஜனாதிபதி மைத்திரி பக்கம் 02

## ஜனாதிபதி வேட்பாளர் தயார்!

### மொட்டுக் கட்சி நேற்று அறிவிப்பு



கொழும்பு, ஜன. 30

மொட்டுச் சின்னத்தின் ஜனாதிபதி வேட்பாளர் தயாராகிவிட்டார் என மஹிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே பக்கம் 11

## ஊடக அடக்குமுறை விடயத்தில் தலையிட்டு நீதியை நிலைநாட்டு!

### பொலிஸ் ஆணைக்குழுவிடம் 8 ஊடக அமைப்புகள் கோரிக்கை

கொழும்பு, ஜன. 30

ஊடகவியலாளர்கள் படுகொலை – கடத்திக் காணாமல் ஆக்கப்பட்டமை – தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமைதொடர்பான விசாரணைகள் அரசியல் அழுத்தம் காரணமாக முடங்கியுள்ளன. ஊடகவியலாளர்களுக்கு பக்கம் 11



## வடக்கிலிருந்து இராணுவம் அகற்றப்படுவது அவசியம்!

### நல்லிணக்கம் எற்பட அதுவே வழி என்கிறார் ஐ.நா. நிபுணர் எமர்ஸன்



நியூயோர்க், ஜன. 30

வடக்கு மாகாணத்தில் இருந்து இராணுவம் அகற்றப்படும்போதே தமிழ் மக்களிடத்தில் நல்லிணக்கத்தையும் நம்பிக்கையும் ஏற்படுத்த முடியும் என்று ஐக்கிய நாடுகளின் முன்னாள் விசேட நிபுணர் பக்கம் 11

## உரிமை மீறல்களுக்குத் தீர்வு காண அரசுக்கு கால அவகாசம் அவசியம்

### கூறுகிறது தேசிய சமாதானப் பேரவை

கொழும்பு, ஜன. 30

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்குத் தீர்வு காண்பதற்குக் கால அவகாசம் அவசியம் எனத் தேசிய சமாதானப் பேரவை தெரிவித்துள்ளது.

தேசிய சமாதானப் பேரவை நேற்றுச் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட விசேட அறிக்கையிலேயே பக்கம் 11

காலைக்கதிர் Kalaikkathir



# ஒற்றையாட்சியைக் கூட்டமைப்பு இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை

## கூறுகின்றார் உதய கம்மன்பில

கொழும்பு, ஜன. 30

ஒற்றையாட்சி அரசு கொள்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் ஏற்றுக் கொள்ளவில்லை என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புதிய அரசமைப்பு வரைவு இன்னமும் உருவாக்கப்படவில்லை என்றும், ஒற்றையாட்சிக் கொள்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டுள்ளதாகவும், பிரதமர் ரணில் விக்ரமசிங்க அண்மையில் கூறியிருக்கிறார்.

துரதிர்ஷ்டவசமாகப் பிரதமர் ரணில் நாட்டை ஏமாற்ற முயற்சிக்கிறார்.

அரசமைப்புச் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தின் முதல் பக்கத்தில், 'இந்த அரசமைப்பு' என்ற சொற்றொடரைக் காணலாம் என்று சுட்டிக்காட்டினோம்.

இந்த வரைவை உருவாக்கிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், இந்த ஆவணம் அரசமைப்பு வரைவு தான் என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்.

எம்முடனான தொலைக்காட்சி விவாதத்தில் அவர், ஒற்றையாட்சி அரசை ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை என்று கூறியிருக்கிறார். தமது சொந்த வியாக்கியானத்தின் அடிப்படையில் தான் அவர்கள் 'ஏக்கியராஜ்ஜிய'என்பதைஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

எனவே, கூட்டமைப்பு, ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டு விட்டது என்று யாரும் கூற முடியாது.

சமஷ்டிப் பண்புகளுடன் தான் புதிய அரசமைப்பு வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது என்ற உண்மையை ஏற்றுக் கொண்ட சம்பந்தனுக்கும், சுமந்திரனுக்கும் நாங்கள் நன்றி கூற வேண்டும் – என்றார். (ஐ)

# ஜனாதிபதி வேட்பாளர் தெரிவால் ராஜபக்ஷாக்கள் இடையே மோதல்

## அமைச்சர் நவீன் திஸநாயக்க தகவல்

ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு விவகாரத்தில் ராஜபக்ஷாக்களுக்கு இடையில் ஒற்றுமை இல்லை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிடவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என அமைச்சர் மனோ கணேசன் தமது முகப்புத்தகத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பாக ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிடும்போதே அமைச்சர் நவீன் திஸநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் புதிதாகப் பதிவு செய்து கொண்ட 17 இலட்சம் வாக்காளர்களும் தீர்க்கமான பங்கை வகிப்பார்கள்.

எனவே, சுத்தமான வேட்பாளர் ஒருவரை விரும்பும் இந்த வாக்காளர்களுடன் ஐக்கிய தேசியக் கட்சி பேசவேண்டும். ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடைபெறும். ஐ.தே.க. இப்போது மிகவும் பலமாக உள்ளது. பொதுத்தேர்தலை எதிர்கொள்ளவும் தயாராகவே உள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தில் ராஜபக்ஷவினர் மத்தியில் ஒற்றுமை இல்லை. குமார வெல்கம போன்ற சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்கள் கோட்டாபய ராஜபக்ஷவை ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. – என்றார்.

# மீண்டும் தலைதூக்குகிறது டெங்கு

கொழும்பு, ஜன. 30

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 3,743 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனத் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் பிரஷீலா சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

மேல் மாகாணத்தில் கம்பஹா, கொழும்பு மாவட்டங்களில் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள நிலையில், யாழ். மாவட்டத்திலேயே அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் கூறிய டெங்கு காய்ச்சலால் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில், வட மாகாணத்தில் நிலவிய சீரற்ற வானிலையைத் தொடர்ந்தே, டெங்குக் காய்ச்சல் வேகமாகப் பரவியுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# ஊழலில் இருந்து தப்பிப்பதற்கே தேசிய அரசு அமைத்தது ஐ.தே.க

## ரொஷான் ரணசிங்க குற்றச்சாட்டு

'கொழும்பு, ஜன. 30

ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஊழல் விசாரணைகளில் இருந்து தப்பிக்கவே ஐக்கிய தேசியக் கட்சி தேசிய அ ரசை அமைத்தது என எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

கண்டியில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சமஷ்டி அரசமைப்பொன்றை கொண்டு வரவும், ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும் தான் ஐக்கிய தேசியக் கட்சி தேசிய அரசை அமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியானது தற்போது அச்சத்தில்தான் உள்ளது. கடந்த நான்கு வருடங்களில் இடம்பெற்ற ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய, ஜனாதிபதி ஆணைக்குழு வொன்று அமைக்கப்படவுள்ளது.

இதன் ஊடாக விசாரணைகள் இடம்பெறுமாக இருந்தால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் போது, ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து எவரும் களமிறங்க முடியாது போய்விடும்.

இதனாலேயே, மீண்டும் ஜனாதிபதியுடன் இணைந்து தேசிய அரசு ஒன்றை அமைக்க ஐக்கிய தேசியக் கட்சி முயற்சித்து வருகிறது. மேலும், அரசமைப்பு தொடர்பிலும் ரணில் விக்கிரமசிங்க தற்போது அதிகமாகப் பேசி வருகிறார். ஒற்றையாட்சி எனக் கூறி சமஷ்டி அரசமைப்பை அமைக்கவே இவர்கள் முயற்சித்து வருகிறார்கள்.

புதிய அரசமைப்பில் சமஷ்டி தன்மை இருப்பதாகச் சம்பந்தனே கூறியுள்ள நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒற்றையாட்சி தான் எனக் கூறிக்கொண்டு வருகிறார்.

இப்படியான கட்சியொன்றுடன் இணைந்து மீண்டும் ஜனாதிபதி, தேசிய அரசு ஒன்றை ஒருபோதும் அமைக்கமாட்டார் – என்றார். (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜாதக நிலையில் இராஜயோகம் யாருக்கு இருக்கின்றதோ அவருக்குத்தான் அரசமைக்கும் வாய்ப்புக் கிட்டும் என்பார்கள். அந்த இராஜயோகம் ரணிலுக்கு இல்லைப் போலும் .

கால்நூற்றாண்டுக்கு முன்னர் பிரதமர் பதவிக்கு வந்த அவர், கால் நூற்றாண்டுக்கு மேலும் பிரதான கட்சிகளில் ஒன்றின் தலைவராக இருக்கின்ற போதிலும், பிரதமர் பதவிக்கு மேல் சென்று ஜனாதிபதியாக முடியவில்லை.

ஒரு தடவை சந்திரிகாவுக்கு தற்கொலைக் குண்டுத் தாக்கு தலை இலக்கு வைத்ததன் மூலம் ரணிலைத் தோற்கடித்து சந்திரிகா பெரு வெற்றி பெற புலிகள் உதவினர்.

அடுத்த தடவை தமிழர்களை வாக்களிக்க விடாமல் தடுத்ததன் மூலம் மஹிந்த ராஜபக்ஷவிடம் ரணில் தோல்வியுற புலிகள் வழி செய்தனர்.

அதற்குப் பிறகு இரண்டு தேர்தல்களிலும் அரசியல் கள நிலைவரம்,பொதுவேட்பாளர்களாக சரத் பொன்சேகாவையும் மைத்திரிபால சிறிசேனவும் நிற்க வைத்து ரணிலைப் புறமொதுக்கச் செய்தது.

இப்படி நான்கு ஜனாதிபதித் தேர்தல்களில் வாய்ப்பை இழந்த ரணில், இனி இந்த ஆண்டு இறுதியில் நடக்கப் போகும் ஜனாதிபதித் தேர்தலிலும் வேட்பாளர் நியமனத்தைக் கோட்டைவிட்டு, தமது அரசியல் வாழ்வில் ஜனாதிபதிப் பதவியை எட்டாமலேயே ஒதுங்க வேண்டி நேரலாம் போல தோன்றுகின்றது.

ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நியமனம் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்குக் கிட்டலாம் என்று பேச்சடிபடுகின்றது.

கடந்த வருடம் இந்தியாவில் ஜோதிடர் ஒருவரைச் சந்தித்தாராம் கரு ஜெயசூரிய.

தென்னிலங்கை அரசியல்வாதிகள் பலரும் – மஹிந்த ராஜபக்ஷ உட்பட – ஜோதிடர்களை நம்பித்தான் தமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கிறார்கள் என்பது தெரிந்த விடயம்தான்.

கரு ஜயசூரிய இப்போதைய சபாநாயகர் பதவிக்கு மேல் உயர்ந்து, நாட்டின் தலைவராக வருவதற்கான இராஜயோகம் இருப்பதாகவும், அவசரப்படாமல் காய்களை நகர்த்த வேண்டும் என்றும் ஆலோசனை கூறினாராம் அந்த ஜோதிடர்.

கடந்த ஒக்ரோபர் 26 க்குப் பிறகு கட்டவிழ்ந்த அரசியல் சதி நடவடிக்கைகளின் போது தாம் கொண்டு வந்த மஹிந்த ராஜபக்ஷ அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பானமையை நிரூபிக்கும் நிலையில் இல்லை என்ற யதார்த்தத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உணர்ந்தபோது, பிரதமர் பதவியை ரணிலிடம் கையளிக்க மறுத்தார். ஐ.தே.கட்சி சார்பில் பிரதமர் பதவியை ஏற்கும்படி கரு ஜெயசூரியவிடம் மன்றாடாத குறையாக வற்புறுத்தினார்.

ஆனால், கரு ஜயசூரிய அசைந்து கொடுக்கவில்லை. ஓடு மீன் ஓடி உறு மீன் வரும் வரைக் காத்திருந்தார்.

அதன் விளைவு இப்போது உறு மீனாகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் வாய்ப்பு அவரைத் தேடி வரும் போல தெரிகின்றது.

பிரதமர் பதவியை ஏற்கும்படி அப்போது அவரை கட்சியினர் சிலர் வற்புறுத்திய சமயம் அதனை அடியோடு நிராகரித்து மறுத்த அவர், இப்போது ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்தை ஏற்குமாறு அதே பிரமுகர்கள் வற்புறுத்தும் போது, மௌனம் காத்து, மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி எனக் கோடி காட்டியிருகின்றாராம்.

இந்திய ஜோதிடர் மட்டுமல்லர், இந்திய அதிகாரப் பீடத்திலும் சில முக்கிய தரப்புகள் ஜனாதிபதித் தேர்தலில் கருஜயசூரிய களமிறங்குவதற்குப் பச்சைக் கொடி காட்டியிருப்பாகக் கேள்வி.

கரு ஜயசூரிய பௌத்தர் என்றாலும் சத்திய சாயி பாபாவின் பக்தர். இந்துத்துவ சார்புப் போக்குள்ள பௌத்தர். அதனால் இப்போது டெல்லியில் அதிகாரத்தில் இருக்கும் சக்திகள் கரு ஜயசூரியவின் வருகையை விரும்பக் கூடும்.

ஆனால், இந்தியாவில் இன்னும் சில மாதங்களில் நாடாளுமன்றத் தேர்தல் வரப் போகின்றது.

இந்த ஆண்டு இறுதியில் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் போது, புதுடெல்லி அதிகார பீடத்தில் இந்துத்துவ சக்திகள் காணாமல் போயிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எது எப்படியோ, அந்த ஜோதிடரின் கணிப்பில் உள்ளவாறு கரு ஜயசூரியவின் ஜாதகத்தில் இராஜயோகம் இருக்குமானால் அவர் ஜனாதிபதியாகின்றமையை யாரும் தடுக்க முடியாது தானே...!

-மின்னல்-

### ஜீன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் கொண்டுவரப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

வடக்கு – கிழக்கு உட்பட 6 மாகாணசபைகளின் ஆட்சிக்காலம் நிறைவடைந்த நிலையில் அவை ஆளுநர்களின் நிர்வாகத்தின் கீழ் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது (ஐ)

### பீல்ட் மார்ஷல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பால சிறிசேன ஐக்கிய தேசிய கட்சி அமைச்சர்கள் இருவரிடம் கூறியுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதியின் நடவடிக்கைகளை நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தொடர்ச்சியாக விமர்சித்துவரும் நிலையில் அவருக்கு அமைச்சுப் பதவி வழங்குவதற்கும் ஜனாதிபதி மறுத்து வருகிறார்.

சரத் பொன்சேகா மற்றும் பாலித ரங்கேபண்டார ஆகியோருக்கு அமைச்சுப் பதவியை வழங்கமாட்டேன் என ஜனாதிபதி திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்.

இதனை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களான கபீர் ஹாசிம் மற்றும் மலிக் சமரவிக்ரம ஆகியோர் ஜனாதிபதியைச் சந்தித்து சரத் பொன்சேகா மற்றும் பாலித ரங்கேபண்டார ஆகியோருக்கு அமைச்சுப் பதவியை வழங்குவது தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர். இதன்போதே பொன்சேகாவின் பீல் மார்ஷல் பட்டம் பறிக்கப்படும் என ஜனாதிபதி எச்சரித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதியின் இந்தக் கூற்று தொடர்பில் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா, தான் அச்சுறுத்தல்களுக்குப் பயப்படுவதில்லை எனக் கூறியுள்ளார். (ஐ)

# இனவாதத்தைத் தூண்டிவிட்டு மக்களைச் சீரழிக்கச் சிலர் சதி!

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 30

நாட்டில் இனவாதத்தையும் மதவாதத்தை ஏற்படுத்தி, மக்களைச் சீரழிக்கச் சிலர் முயற்சிக்கின்றனர் என வீடமமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

மட்டக்களப்பு போரதீவுபற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தும்பங்கேணி இளைஞர் விவசாயத் திட்ட கிராமத்தில் அமைக்கப்பட்ட 25 வீடுகளைக் கொண்ட ஆனந்தபுரம் மாதிரி கிராமம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மக்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பங்கேற்று மக்களுக்கு வீடுகளைக் கையளித்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டில், அரசியலில் இரட்டை நாக்கை உடையவர்கள் அதிகம் காணப்படுகின்றார்கள். அதில் எதிர்க்கட்சியிலேயே சிறப்பான பலர் இருக்கிறார்கள்.

அங்குள்ள ஒருவர் தான் நல்ல பௌத்தன் எனக் கூறிக் கொள்கின்றார். அப்படிப்பட்டவர் கதிர்காமத்துக்குச் சென்று அங்குள்ள கடவுளை வணங்கிவிட்டுத் திரும்பி வரும் வழியில் அங்குள்ள இந்துக் கடவுள்களின் சிலைகளை அடித்து நொருக்க வேண்டும் எனச் சிலர் அவரிடம் கூறினால் அதனை உடையுங்கள் என உத்தரவிடுபவராக இருக்கிறார்.

நானும் ஒரு பௌத்த மதத்தைச் சேர்ந்தவன்தான். ஆனால் நான் ஓர் நேர்த்தியான பௌத்தன். இந்துக் கடவுள்களை வழிபடுகின்றேன். மக்கள் முன்சென்று இந்துக் கடவுளை வணங்கிவிட்டு வாகனத்திலே ஏறிச் சென்று இறங்கி இந்துக் கடவுள்களின் சிலைகளை உடைக்குமாறு உத்தரவிடுவது சரியா?.

அப்படிக் கூறுபவன் நானில்லை. நான் உள்ளே ஒன்று வெளியே ஒன்று செய்பவனல்லன். எனது வெளிப்படைத்தன்மை எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாகத்தான் காணப்படுகின்றது.

நான் ஏனையவர்களைப்போல் இனவாதத்தை, மதவாதத்தை தோற்றுவித்து, மதப் பிரசாரங்களை உருவாக்கி மக்களைப் பின்தங்கிய நிலைக்குத் தள்ளுபவன் இல்லை. இவ்வாறான செயற்பாடுகளைச் சிலர் செய்து வருகின்றார்கள்-என்றார். (ஐ)

# ஒரு வாரம் தேசியக் கொடி பறக்க விடுமாறு கோரிக்கை

கொழும்பு, ஜன. 30

இலங்கையின் 71ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு எதிர்வரும் முதலாம் திகதி முதல் ஒரு வாரத்துக்கு தேசியக் கொடியைப் பறக்கவிடுமாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கமைய அனைத்து இல்லங்களிலும் வர்த்தக நிலையங்களிலும் அரச மற்றும் தனியார் அலுவலகங்கள் மற்றும் வாகனங்களிலும் தேசியக் கொடியை ஏற்றுமாறும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு கூறியுள்ளது.



எதிர்வரும் 4ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் காலி முகத்திடலில் 71 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை, சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெறவுள்ள ஒத்திகை நடவடிக்கைகள் காரணமாக நாளை முதல் காலி முகத்திடலை அண்மித்த வீதிகளில் விசேட போக்குவரத்து ஒழுங்குகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நாளை காலை 7 மணி முதல் 12 மணி வரை ஒத்திகைகள் இடம்பெறவுள்ளன. எதிர்வரும் முதலாம் திகதி முதல் 3ஆம் திகதி வரை, காலை 7 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை ஒத்திகைகள் இடம்பெறவுள்ளன. (ஐ)

# பம்பைமடுக் குப்பைமேட்டால் நேற்று வெடித்தது போராட்டம்

## ஏ-9 வீதியில் வாகன நெரிசல்



வவுனியா, ஜன. 30

வவுனியாப் பிரதேசத்தின் கழிவுகள் பம்பைமடுவில் கொட்டப்படுகின்றமையால் தமது கிராமம் பல்வேறு பாதிப்புகளை சந்திப்பதாகத் தெரிவித்து சாளம்பைகுளத்தில் வசிக்கும் மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நேற்றுக் காலை 7 மணியளவில் குப்பைமேட்டுக்குச் செல்லும் பிரதான வாயிலை மறித்த பொதுமக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள்,

நீண்டகாலமாக இப்பகுதியில் கழிவுகள் கொட்டப்படுகின்றன. இதனால் எமது கிராமத்தில் வசிக்கமுடியாத நிலை காணப்படுகின்றது. துர்நாற்றம் வீசி வருவதுடன், நுளம்புகளின் தொல்லைகள் அதிகமாக காணப்படுகின்றன. எனவே இந்தக் குப்பை மேடு அகற்றப்படாவிடில் போராட்டத்தை நிறுத்தமாட்டோம்-என்றனர்.

அத்துடன் குப்பைகளை ஏற்றிவந்த வாகனங்களையும் உள்ளே செல்ல அவர்கள் அனுமதிக்கவில்லை.

சம்பவ இடத்துக்கு மாவட்ட மேலதிக அரசஅதிபர் தி.திரேஸ்குமார் நேரில் சென்று விடயம் தொடர்பாக ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேசியிருந்தார்.

இந்தக் குப்பைமேட்டை அகற்றுவது தொடர்பாக அனைத்து தரப்புகளையும் உள்ளடக்கிய வகையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. அதில் சரியான தீர்வு ஒன்று வழங்கப்படும். எனவே போராட்டத்தைக் கைவிடுமாறு மக்களிடம் கோரினார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், கலந்துரையாடலை முடித்துவிட்டுத் தாங்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் பகுதிக்கு வருகை தந்து முடிவைக் கூறுமாறும், தாங்கள் எதிர்பார்த்த தீர்வு கிடைத்தால் போராட்டத்தைக் கைவிடுகிறோம் எனவும் தெரிவித்தனர்.

போராட்டம் காரணமாக மாவட்டத்தின் கழிவகற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக மாவட்டத்தின் கழிவுகளை அகற்றும் வாகனங்கள் அதனைக் கொட்ட முடியாமல் திரும்பிச் சென்றன. அவை வவுனியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

நகரசபையின் வாகனங்கள் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஏ-9 வீதியை மறித்து நிறுத்தப்பட்டுள்ளமையால் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது. (ஐ)

# மன்னாரில் 16 ஏக்கர் காணிகள் இராணுவத்தினரால் விடுவிப்பு



மன்னார், ஜன. 30

மன்னார் மாவட்டத்தில் இராணுவத்தின் வசமிருந்த ஒரு தொகுதி காணிகள் உத்தியோகபூர்வமாக மாவட்ட அரச அதிபரிடம் கைளிக்கப்பட்டுள்ளன.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.15 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் வைத்து மன்னார் மாவட்ட அரச அதிபர் சி.ஏ. மோகன்றாஸிடம் காணிக்கான ஆவணங்கள் இராணுவ அதிகாரியால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளன.

அதன்படி மன்னார்-தள்ளாடி இராணுவத்தின் 54ஆவது மற்றும் 61 ஆவது படைப்பிரிவின் கீழ் இராணுவத்தினரின் வசமிருந்த 16 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

தள்ளாடி இராணுவத்தின் 54 ஆவது படைப்பிரிவு அதிகாரி பிரிகேடியர் சேனாரத்ன பண்டார மற்றும் இராணுவத்தின் 61ஆவது படைப்பிரிவு அதிகாரி ஜேம திலகரத்ன ஆகியோர் இந்தக் காணிகளுக்கான ஆவணங்களைக் கையளித்தனர். (ஐ)

# பொகவந்தலாவ தீ விபத்தினால் 14 குடியிருப்புகள் எரிந்து நாசம்




பொகவந்தலாவ, ஜன. 30

பொகவந்தலாவ வானகாடு தோட்டத்தில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தால் 14 தொழிலாளர் குடியிருப்புகள் முற்றாகத் தீக்கிரையாகியுள்ளன.

இந்த வீடுகளில் குடியிருந்த 16 குடும்பங்களைச் சேர்ந்த 66 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் ஆண்கள் 24 பேரும், பெண்கள் 21 பேரும், சிறுவர்கள் 21 பேரும் அடங்குகின்றனர்.

பொகவந்தலாவ பொலிஸார், ஹற்றன் டிக்கோயா நகர சபை தீயணைப்புப் படையினர் மற்றும் பொது மக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

சுமார் 2 மணித்தியாலங்களுக்குப் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

எனினும், 14 வீடுகளில் இருந்த பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், பாடசாலை மாணவர்களின் சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் தீக்கிரையாகியுள்ளன.

பாதிக்கப்பட்டவர்கள் தற்காலிகமாக தோட்டத்தின் கலாசார மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நிவாரண உதவிகளைத் தோட்ட நிர்வாகமும், நோர்வூட் பிரதேச சபையும், மலைநாட்டுப் புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சும் வழங்கியுள்ளன.

தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

பொகவந்தலாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ஒன்றிணையுமா தமிழர் தரப்பு?

ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 40ஆவது அமர்வு அடுத்த மாதம் 25 ஆம் திகதி ஆரம்பமாகி மார்ச் மாதம் 22 ஆம் திகதி முடிவடைகின்றது.

மார்ச் 10 ஆம் திகதியளவில் இலங்கை விவகாரம் அங்கு எடுக்கப்படும் எனத் தெரிகின்றது.

கவுன்ஸிலின் 30 ஆவது அமர்வு 2015 செப்ரெம்பர் – ஒக்டோபர் மாதங்களில் நடைபெற்றபோது இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், மனித உரிமைகளின் மேம்பாடு, வன்முறை மீண்டும் நிகழாமை ஆகியன தொடர்பாக 30/01 இலக்கத் தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இலங்கை தானும் சேர்ந்து அனுசரணைப் பணி வகுத்து, கொண்டு வந்த அந்தத் தீர்மானத்தில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற மனித குலத்துக்கு மாறான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பில் நீதியான, முறையான விசாரணை நடைபெற்று, இழைத்த கொடூரங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறல் முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்தது.

ஆனாலும், ஒன்றரை ஆண்டுகள் கடந்தும், யதார்த்தத்தில் அத்தகைய கடப்பாடுகள் எவற்றையும் இலங்கை அரசுத் தரப்பு நிறைவேற்றத் தவறிய நிலையில், 2017 மார்ச்சில் நடைபெற்ற 34 ஆவது அமர்வில் மற்றொரு தீர்மானம் மூலம், ஏற்கனவே தான் கவுன்ஸிலுக்கு அளித்த உறுதிமொழிகள் மற்றும் தனது கடப்பாடுகளை இலங்கை நிறைவு செய்வதற்கு மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்பட்டது. பொறுப்புக்கூறல் நடவடிக்கை சர்வதேச நீதிமுறைமைகள் சம்பந்தப்பட்ட நீதி ஆயம் மூலம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டது.

ஆனால், அவை எவற்றையும் மேலும் இரண்டு ஆண்டுகளாகியும் இலங்கை முன்னெடுக்கவே இல்லை.

* இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள். மனிதாபிமானச் சட்டங்களுக்கு எதிரான கொடூரங்கள் குறித்து நீதி விசாரணைக்கான பொறிமுறை கிஞ்சித்தும் கூட முன் நகரவில்லை. யுத்தக் குற்றங்களை இழைத்தவர்கள் யுத்த ஹீரோக்களாக நாட்டில் போற்றப்பட்டு உலவ விடப்பட்டிருக்கின்றார்கள்.

* காணாமல் போனோர் விவகாரத்தைக் கையாள்வதற்காக ஒரு தனியான அலுவலகம் என்ற கண்துடைப்பு நாடகம் மட்டுமே அரங்கேறியுள்ளது. பயனுள்ள வேறு எந்த அம்சமும் இதில் நடக்கவில்லை.

* அரசியல் கைதிகள் விடயத்துக்கு நிரந்தர தீர்வு ஏதும் காணப்படவில்லை.

* மிகக் கொடூரமான – மனிதாபிமானமற்ற – மிக மோசமான – ஒரு சட்டம் என்று எல்லாத் தரப்புகளினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இன்னும் மீளப் பெறப்படவில்லை என்பது மட்டுமல்லாமல், அதன் கீழான அநீதியான சட்டச் செயற்பாடுகள் தொடருகின்றன.

* படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட சிவிலியன்களின் காணிகள் மீளக் கையளிக்கப்படுகின்றமையில் மந்த கதிப் போக்கு நீடிக்கின்றது.

* மீண்டும் இத்தகைய வன்முறை நிலைமை ஏற்படாது என்பதை உறுதிப்படுத்தவும், நல்லிணக்கம் ஏற்படவும், பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தவும் காத்திரமான, திருப்திதரத்தக்க நடவடிக்கைகள் எவையும் இலங்கையில் எடுக்கப்படவில்லை.

* இலங்கையில் புரையோடிப் போயிருக்கும் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கான அருமையான வாய்ப்பு, தென்னிலங்கையின் மூடத்தனமான பேரினவாதச் சிந்தனைப் போக்கினால் குழம்பி, முட்டுச் சந்தியில் முடங்கிப் போய்விட்டது.

– இப்படி இலங்கையில் மனித உரிமைகளை நிலைநிறுத்தும் விவகாரத்தில் பல பின்னடைவுகள் தொடர்கின்றமை சுட்டிக் காட்டப்படுகின்றது.

மனித உரிமைகள் விவகாரத்திலும் தமிழருக்கு எதிராகப் புரியப்பட்ட யுத்தக் குற்றக் கொடூரங்கள் தொடர்பான விடயத்திலும் நீதியை நிலைநாட்டுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையும் முன்னெடுக்காமல், காலத்தை இழுத்தடித்து ஏமாற்றி வருகின்றது இலங்கை.

இதற்கிடையில் –

இலங்கை அரசுக்கு, இவ்விடயங்களில் கண்ணை மூடிக் கொண்டு மேலும் கால அவகாசம் வழங்கும் நிலைப்பாட்டை எடுப்பதற்கு மேற்குலகு தயாராகி வருவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அத்தகைய ஒரு நிலைப்பாட்டுக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஏற்கனவே பச்சைக் கொடி காட்டி விட்டாகவும் கூடத் தகவல்.

இந்தப் பின்புலத்தில்தான் இவ்விடயத்தை தமிழர்கள் எவ்வாறு கையாளப் போகின்றனர் என்ற கேள்வி எழுகின்றது.

தீர்வுக்கான வாய்ப்புகளும் குழம்பி, தமக்கு எதிராக இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், யுத்தக் குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறலும் சாத்தியப்படாமல் போயிருக்கும் இந்தப் பின்னடைவு நிலையில் –

தமிழருக்குத் தீர்வை எட்டுவதற்கான கொழுகொம்பாகத் திகழும் சர்வதேச சமூகத்தை வளைத்துப் போடும் கடப்பாடும் கட்டாயமும் தமிழருக்கு வந்துள்ளது.

அதனைச் செய்வதற்காக, ஜெனீவா அமர்வை ஒட்டி தமிழர் தரப்புகள் அரசியல்ரீதியாக ஒன்றிணைவது காலத்தின் கட்டாயமாகியுள்ளது. சம்பந்தப்பட்டோர் செய்வார்களா?

# கஞ்சா விற்பனை – தகவல் வழங்கிய மாணவன் தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதி

## கிளிநொச்சி கோணாவிலில் சம்பவம்



தேசிய போதைப் பொருள் ஒழிப்பு வாரத்தின் போது கஞ்சா விற்பனை செய்யப்படும் தகவல் வழங்கிய மாணவன் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருந்த நிலையில் தற்போது தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது :–

ஜனாதிபதியின் பணிப்புக்கு அமைய தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வாரம் பாடசாலைகள் தோறும் கடந்த 21 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை இடம்பெற்று வந்தது. இதன்போது பாடசாலைகள் இந்த ஐந்து நாள்களும் துறைசார்ந்தவர்களை அழைத்து போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு கருத்துக்களை வழங்க வேண்டும் . அதனடிப்படையில் கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலயத்தில் தரம் எட்டில் கல்வி கற்கின்ற மாணவன் ஒருவன் பொலிஸாரிடம் தனது பிரதேசமான கோணாவில் கிழக்கு பிரதேசத்தில் கஞ்சா விற்பனை இடம்பெறுகிறது என்ற தகவலை வழங்கியிருந்தான்.

இந்ததகவல் கஞ்சா விற்பனை செய்பவர்களின் காதுகளுக்கு சென்றடைய அவர்கள் அந்த மாணவனை அச்சுறுத்தியதோடு, தாக்குவதற்கும் முயற்சித்திருந்தனர். அத்தோடு மாணவனின் குடும்பமும் அவர்களின் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்திருந்தது. இது தொடர்பான செய்திகள் சில நாள்களுக்கு முன் ஊடகங்களில் வெளிவந்தன.

இதனையடுத்து நேற்றுமுன்தினம்(28.01.2019) இரவு ஏழு முப்பது மணியளவில் அந்த மாணவன் வீட்டுக்கு அருகில் உள்ள கடையொன்றுக்கு சென்று திரும்பிக்கொண்டிருந்த போது உந்துருளியில் வந்த மூவர் மாணவனை மோதி தள்ளிவிட்டு நீ. செத்தாயடா என்று கூறியவாறு தப்பிச் சென்றுவிட்டனர்.

இதனால் காலில் பாதிக்கப்பட்ட மாணவன் அவசரநோயாளர் காவு வண்டி மூலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளான். தற்போது மாணவனுக்கு காலில் முறிவு ஏற்பட்டு அதற்கான சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஏற்கனவே தமது மகனுக்கு பாதுகாப்பு இல்லை என்று தெரிவித்து பெற்றோர் பாடசாலைக்கும் கடிதம் ஒன்றை எழுதியிருந்தனர். அத்தோடு மாணவனை பாடசாலையிலிருந்து இடைநிறுத்துவதற்கும் தீர்மானித்திருந்த நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அச்சுறுத்தலுக்குள்ளான சம்பவம் தொடர்பில் மாணவனின் தந்தை ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்ட 1984 அழைப்பினை மேற்கொண்டு அறிவித்தும் கிளிநொச்சி பொலிஸ் பிரிவின் பெண்கள் சிறுவர் பிரிவில் முறைப்பாடு செய்தும் மாவட்டத்தில் சிறுவர்களின் நலன்களை பாதுகாக்கின்ற பல அமைப்புகள் இருந்தும் இச்சம்பவம் தொடர்பில் எவரும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்பது கவலைக்கும் கண்டத்திற்கும் உரியது என சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

# அதி உயர மின் கம்பங்கள் அமைக்க பயன்தரு மரங்கள் வெட்டிச் சாய்ப்பு



மன்னார் சௌத்பார் சாந்திபுரம் கிராமம் ஊடாக இலங்கை மின்சார சபையால் அதி உயர் மின் கம்பங்கள் நடப்படுவதற்காக அக்கிராம வீடுகளில் உள்ள தென்னை, பனைமரங்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை(28) காலை முதல் இலங்கை மின்சார சபை பணியாளர்களால் வெட்டிச் சாய்க்கப்பட்டுள்ளன.

அதி உயர் மின்கம்பங்கள் நடப்பட்டுள்ள பகுதியினுள் குறிப்பிட்ட உயரத்துக்கு மேல் உயரமாக வளர்ந்துள்ள அனைத்து மரங்களும் அவ் ஊழியர்களால் வெட்டப்பட்டு அகற்றப்பட்டுள்ளன.

வட பிராந்திய (யாழ்ப்பாணம்) மின்சார சபையினால் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சாந்திபுரம் கிராமத்தின் ஊடாக அதி உயர் மின்கம்பம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட தினங்களுக்குள் வீட்டின் உரிமையாளர்கள் தென்னை மரங்களை வெட்டி அகற்றாது விட்டால் இலங்கை மின்சார சபை பணியாளர்கள் அதனை அகற்றுவார்கள் என தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் கடந்த டிசம்பர் மாதம் இலங்கை மின்சார சபையின் பணியாளர்கள் சாந்திபுரம் கிராமத்துக்கு சென்று சில வீடுகளில் பலவந்தமான முறையில் தென்னை மரங்களை வெட்ட முற்பட்ட போது மக்களின் எதிர்ப்பு காரணமாக பணியை தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தனர்

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அப்பகுதி மக்களின் வீடுகளில் அடையாளப்படுத்தப்பட்ட அனைத்து மரங்களும் மின்சார சபை ஊழியர்களால் வெட்டிச் சாய்க்கப்பட்டன. எதிர்ப்பு தெரிவித்த மக்கள் மீது சட்டம் பாயும் என தெரிவித்ததை அடுத்து மக்கள் அனுமதி வழங்கினர்.

ஆனாலும் வெட்டப்பட்ட மரங்களுக்கான நஷ்டஈடு வழங்குமாறு மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் எழுத்து மூல எந்த ஓர் ஒப்புதலும் வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்

தமது வீடுகளில் நின்ற தென்னை மரங்களால் வருமானத்தை பெற்றுக்கொண்டதாகவும் தற்போது மரங்கள் வெட்டி சாய்க்கப்பட்டமையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம் என்றும் சாந்திபுரம் கிராம மக்கள் தெரிவித்தனர். (எ – 112)

# யாழ். பல்கலை மாணவி நேற்று சடலமாக மீட்பு

(நிதர்ஷன்)

சாவகச்சேரி,ஜன.30

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட 2 ஆம் வருட மாணவி அவரது வீட்டு முற்றத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 5.00 மணிக்கு நுணாவில் மேற்கு சாவகச்சேரியில் இடம்பெற்றுள்ளது.

சிறீதரன் கோகிலமதி (வயது 22) என்ற பல்கலைக்கழக மாணவியே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

இச்சம்பவம் தொடர்பாக ஆரம்பகட்ட விசாரணைகளை முன்னெடுத்த சாவகச்சேரி பொலிஸார் தெரிவிக்கையில்; இந்த மாணவியின் காதலர் ஒரு மாதத்துக்கு முன்னர் நோய்வாய்ப்பட்ட நிலையில் இறந்துள்ளார் எனவும் இதனால் மனவிரக்திக்கு உள்ளாகியிருந்த மாணவி தூக்கிட்டு தற்கொலை செய்திருக்கலாம் எனவும் தெரிவித்தனர்.

மாணவியின் சடலம் பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ)

### நாளை

31.01.2019
வியாழக்கிழமை
நட்சத்திரம்: கேட்டை மு.இ 10.07 வரை
திதி : ஏகாதசி சித்தம் மு.இ 8.44 வரை
சுபநேரம் : 8.06 – 9.36 வரை
இராகுகாலம் : 2.06 – 3.36 வரை

# வடக்கில் படைப்புழுத் தாக்கம் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு

(எஸ்.நிதர்ஷன்)

*யாழ்ப்பாணம்,ஜன.30*

*வடக்கு விவசாயிகளை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ள படைப்புழுவின்தாக்கத்தைகட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு செயற்திட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.*

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் க.தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலைய மேலதிக பணிப்பாளர் கலாநிதி எஸ்.ஜே.அரசகேசரி, முருங்கன் விவசாய ஆராய்ச்சி உதவி விவசாய பணிப்பாளர் எஸ்.இராஜேஸ்கண்ணா, பிரதி மாகாணப் பணிப்பாளர் எஸ்.அஞ்சனாதேவி மற்றும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கான விழிப்புணர்வை வழங்கியிருந்தனர்.



இதன் போது படைப் புழுவின் தாக் கத்தை ஆரம்பத்திலேயே எவ்வாறு இனங்காண்பது, அதனை கட்டுப் படுத்துவதற்கு இரசாயன முறையில் கையாள வேண்டிய விடயங்கள் என்பவை தொடர்பான அறிவுறுத்தல்கள் அதிகாரிகளால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

மேலும் படைப்புழு தாக்கத்தின் வெளிப்பாடு எவ்வாறாக இருக்கும் என்பது தொடர்பான காணொலி (வீடியோ) விவசாயிகளுக்கு காண்பிக்கப்பட்டது.

# வவுனியா விபுலானந்தா கல்லூரியில் பயணிகள் நிழற்குடை திறந்து வைப்பு

வவுனியா,ஜன.30

வவுனியா விபுலானந்தா கல்லூரியில் சாரணர்களால் பயணிகள் நிழற்குடை ஒன்று அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.



விபுல சாரணன் தர்மசீலன் லிசாந்தனின் ஜனாதிபதி விருது செயற்றிட்டமாக இந்த பயணிகள் நிழல் குடை மாணவர்களின் நலன் கருதி அமைக்கப்பட்டுள்ளது.

விபுலானந்தா கல்லூரி சாரணர் ஆசிரியர் எஸ்.தற்பரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மாவட்ட சாரணர் ஆணையாளர் எஸ்.உலகநாதன், பாடசாலை அதிபர் பொன்.சிவநாதன், பிரதி அதிபர் றொசன், விபுல சாரணர்களின் உயர் விருதான பேடன் பவல் விருதையும், ஜனாதிபதி விருதையும் பெற்றவரும் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளருமான சு.காண்டீபன், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் ஸ்ரீதரன், கல்லூரியின் ஜனாதிபதி சாரணர்களான வி.சஜீவ்நாத், வ.பிரதீபன், யோ.சதுர்சிகன், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், சாரணர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

*பெப்ரவரி நடுப்பகுதியில்*

# கிளாலி பிரதான வீதி புனரமைப்பு ஆரம்பம்

கிளாலி,ஜன.30

கிளாலி – எழுதுமட்டுவாள் பிரதான வீதி நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் வேண்டுகோளின் பேரில் வடக்கு அபிவிருத்தி அமைச்சின் எண்பத்தியொரு மில்லியன் ரூபாய் செலவில் புனரமைப்பு பணிகள் பெப்ரவரி மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படுமென பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்துள்ளார்.



கிளாலி பகுதியில் மேற் கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகளின் முன்னேற்றங்களை பார்வையிட தனது குழுவினருடன் சென்ற தவிசாளர் அங்குள்ள மக்கள், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகளை சந்தித்து கலந்துரையாடிய போதே இதனை தெரிவித்தார்.

இந்த வீதி புனரமைப்பு தொடர்பாக அப்பகுதி மக்களின் தொடர்ச்சியான வேண்டுகோளின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் முயற்சியால் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# அகழ்வு செய்யப்படும் கற்றாலைச் செடிகள் கண்டு கொள்ளாத அதிகாரிகள்,பொலிஸார்

## நானாட்டான் மக்கள் விசனம்

மன்னார்,ஜன.30

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வங்காலை கற்றாலம் பிட்டி பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் தொடர்ச்சியாக கற்றாலை செடிகள் சட்ட விரோதமான முறையில் அகழ்வு செய்யப்படுகின்ற போதும், வங்காலை பொலிஸார் மற்றும் உரிய திணைக்கள அதிகாரிகள் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில்லை என வங்காலை கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வங்காலை கற்றாலம் பிட்டி பகுதி வன ஜீவராசிகளுக்கு சொந்தம் என குறிப்பிடப்பட்ட வங்காலை சரணாலயத்தில் அரியவகையான கற்றாலைச் செடிகள் காணப்படுகின்றன.

அண்மைக்காலங்களில் தொடர்ச்சியாக இனம் தெரியாத நபர்களால் இந்த கற்றாலைச் செடிகள் சட்ட விரோதமாக அகழ்வு செய்யப்பட்ட போதும், கிராம மக்களால் குறித்த நபர்கள் பிடிக்கப்பட்டு வங்காலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

எனினும் தொடர்ந்து அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் குறித்த பகுதியில் கற்றாலைச் செடிகள் அழிவடைந்து வருகின்றன.

இந்த நிலையில் நேற்று முன்தினமிரவு இந்த கற்றாலம்பிட்டி பகுதியில் வேறு இடங்களைச் சேர்ந்த மூவர் கற்றாலை செடிகளை அகழ்வு செய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தை அவதானித்த வங்காலை கிராமத்தைச் சேர்ந்த பிரதேச வாசி ஒருவர் வங்காலை ஆலய நிர்வாகத்துக்கு தெரியப்படுத்திய நிலையில், அப்பகுதிக்கு உடன் சென்றுள்ளனர்.

எனினும் அகழ்வு செய்யப்பட்ட பல மூடைகளைக் கொண்ட கற்றாலைச் செடிகளை கைவிட்டு சம்பந்தப்பட்டவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பில் வங்காலை மக்கள் தமது விசனத்தை தெரிவித்துள்ளனர்.

வியாபார நோக்குடன் இந்த கற்றாலைச் செடிகள் அகழ்வு செய்யப்பட்டு வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

எனினும் தமது கிராமத்தில் மருத்துவ தேவைகளுக்கு கூட ஒரு கற்றாலையையும் தாம் அகழ்வு செய்வதில்லை என மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயத்தில் வங்காலை பொலிஸார், வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் அசமந்த போக்குடன் நடந்து கொள்வதினாலேயே இந்த சம்பவம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாகவும், எனவே பொலிஸாரும், உரிய அதிகாரிகளும் இதற்கு எதிராக உரிய நடவடிக் கைகளை உடன் மேற்கொள்ள வேண்டும் என வங்காலை கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# இல்ல மெய்வன்மை போட்டி நாளை

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி, நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு, அருமைத்துரை மைதானத்தில், அதிபர் கு.திலீபன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழபு செயலக இடர் முகாமைத்துவ பணிப்பாளர் சங்கரப்பிள்ளை ரவியும் சிறப்பு விருந்தினராக பழைய மாணவனான இராமநாதன் சத்தியநாதனும் (லண்டன்) கலந்து கொள்வர்.

***

அல்லப்பட்டி பராசக்தி வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு, சென். பிலிப்ஸ் விளையாட்டு மைதானத் தில் அபர் கோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக பழைய மாணவர் த.கேதீஸ்வரமூர்த்தியும் கௌரவ விரந்தினராக வேலனை விளையாட்டு உத்தியோகத்தர் மு. போர்ட்நிஜாந்தும் சிறப்பு விருந்திகனராக சென். பிலிப் நேரியர் தேவாலய செயலாளர் அ.அருள்ஜெகினும் கலந்து கொள்வர். (இ

# மைதான காணி விடுவிப்பு தொடர்பில் பிரதியமைச்சர் தலைமையில் கலந்தாய்வு

கிண்ணியா,ஜன.30

திருகோணமலை கிண்ணியா சூரங்கல் மைதான காணி விடுவிப்பு தொடர்பிலான கலந்தாய்வு நேற்றுமுன்தினம் (28) கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.ஹனி தலைமையில் துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை பிரதியமைச்சர் அப்துல்லா மஹரூப்பால் முன்னெடுக்கப்பட்டது.




இந்தக் காணி வன இலாகாவுக்கு சொந்தமான காணி என கூறப்பட்டு வரும் நிலையில் இந்த பொது மைதானத்தை உடனடியாக விடுவிக்குமாறு உரிய வன இலாகா அதிகாரி அல்விஸ்ஸுக்கு துறை முகங்கள் மற் றும் கப்பல் துறை பிரதியமைச்சர் அப்துல்லா மஹரூப் அவர்கள் விளை யாட்டு மைதான கள விஜயம் ஒன்றை மேற்கொண்டு தெளிவு படுத்தியதுடன் விடுவிப்பு தொடர்பில் உரிய அதிகாரியை பணித்தார்.

உரிய மைதான காணிக்கான ஆவணங்களை வன இலாகா அதிகாரிக்கு பிரதியமைச்சர் ஆதாரங்களுடன் தெளிவு படுத்தியதுடன் விடுவிப்பு தொடர்பில் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

குறித்த கலந்தாய்வில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.ஹனி, வன இலாகா அதிகாரி அல்விஸ், உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.றியாத், பிரதியமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் டாக்டர் ஹில்மி முகைதீன் பாவா உள்ளிட்ட கிராம இளைஞர்கள் என பலரும் பங்கேற்றார்கள். (எ)

## தனி ஈழத்துக்கு ஆதரவளித்த ஜோர்ஜ் பெர்னான்டஸ் நேற்று காலமானார்



புதுடில்லி,ஜன.30

முன்னாள் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னான்டஸ் வயது (88) உடல்நலக் குறைவால் காலமானார்.

டில்லியில் உள்ள இல்லத்தில் நேற்று காலை 7 மணிக்கு ஜோர்ஜ் பெர்னான்டஸ் உயிர் பிரிந்தது.

1930 ஜுன் மாதம் 3ஆம் திகதி கர்நாடக மாநிலம் மங்களூருவில் பிறந்த ஜோர்ஜ் பெர்னான்டஸ், வாஜ்பாய் அமைச்சரவையில் பாதுகாப்புத்துறை அமைச்சராக பதவி வகித்தார். 2001 முதல் 2004 வரை பாதுகாப்புத்துறை அமைச்சராக பணியாற்றினார். மேலும் 1989 முதல் 1990 வரை வி.பி.சிங் தலைமையிலான அமைச்சரவையில் ரயில்வே அமைச்சராக இருந்துள்ளார். 2010ஆம் ஆண்டு வரை மாநிலங்களவை உறுப்பினராக பணியாற்றியுள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு தோழமையான மனிதராக இருந்தவர். ஜோர்ஜ் பெர்னான்டஸ் பாதுகாப்புத்துறை அமைச்சராக இருந்தபோது தான் கார்கில் போர் நடைபெற்றது, அத்துடன் தனி ஈழம் அமைய வேண்டும் என பேசியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேச பாதுகாப்புக்காக கடுமையான முடிவு எடுப்போம் என பிரதமர் மோடி அறிவிப்பு

புதுடில்லி,ஜன.30

தேச பாதுகாப்புக்காக கடுமையான முடிவுகளை எடுக்க தயங்க மாட்டோம் என பிரதமர் மோடி கூறினார்.

டில்லியில், இந்த ஆண்டுக்கான குடியரசு தின முகாமில் என்.சி.சி. மாணவர்களின் அணிவகுப்பு நிறைவு நிகழ்ச்சி நடைபெற்றது. அதில், பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டு, மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட பின்னர் பேசும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனதுரையில் மேலும் தெரிவிக்கையில்

இந்தியா, அமைதியை வலியுறுத்தும் நாடு. இருப்பினும், தேச பாதுகாப்பை உறுதி செய்ய கடந்த நான்கரை ஆண்டுகளில் எத்தனையோ நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இனிவரும் நாட்களிலும், தேச பாதுகாப்புக்காக கடுமையான, பெரிய முடிவுகளை எடுக்க அரசு தயங்காது. ஏனென்றால், தேச பாதுகாப்புக்குத்தான் நாங்கள் முன்னுரிமை அளிக்கிறோம்.

போர் விமானங்கள் உள்ளிட்ட இராணுவ தளபாடங்கள் வாங்குவது தொடர்பான பாதுகாப்பு திட்டங்கள், கடந்த பல ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டன. இந்த ஆட்சியில்தான் அத்திட்டங்களை செயல்படுத்தி உள்ளோம். அதன்படி, போர் விமானங்கள், ஏவுகணைகள், டாங்கிகள் உள்ளிட்டவை வாங்கப்பட்டுள்ளன.



நிலத்திலும், நீரிலும், வானிலும் இருந்து அணு ஆயுதங்களை ஏவக் கூடிய சக்தி படைத்த ஒரு சில நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இடம்பிடித்துள்ளது. இருந்தாலும், நாங்களாக போரை தூண்ட மாட்டோம். போரை தூண்டினால், எதிரியை விடமாட்டோம் என்று நமது படைகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

புதிய இந்தியாவில் ஊழலுக்கு இடமில்லை. ஊழலில் ஈடுபடுபவர்களை விடமாட்டோம். பணியில் சிரத்தை கொண்டவர்களுக்கு 'புதிய இந்தியா' நிறைய வாய்ப்புகளை அளிக்கும் என்றார்.

# பா.ஜ.கவுடன் கூட்டணி அமைக்க நிபந்தனை விதிக்கும் சிவசேனா



நாடாளுமன்ற தேர்தல் கூட்டணி தொடர்பாக பா.ஜனதாவுக்கு சிவசேனா திடீர் நிபந்தனை விதித்து உள்ளது. எப்போதுமே நாங்கள் தான் பெரிய அண்ணன் என்பதால், பேச்சுவார்த்தைக்கு நீங்கள் தான் எங்களிடம் வர வேண்டும் என்று தெரிவித்து இருக்கிறது.

சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே நேற்றுமுன்தினம் தனது மாதோ இல்லத்தில் எம்.பி. மற்றும் எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார். இதில், தேர்தல் கூட்டணி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

பின்னர் வெளியே வந்த சஞ்சய் ராவத் எம்.பி.யிடம் நிருபர்கள் பேட்டி கண்டனர். அவர் தெரிவிக்கையில்;

மராட்டியத்தை பொறுத்தவரை கூட்டணியில் எப்போதும் சிவசேனா கட்சி தான் பெரிய அண்ணனாக செயல்பட்டது. இனியும் பா.ஜனதா மற்றும் மற்ற கட்சிகளுடன் கூட்டணி வைத்தாலும் சிவசேனாவே பெரிய அண்ணனாக செயல்படும். அவர்கள்(பா.ஜனதா) கூட்டணி வைக்க விரும்பினால் எங்களுடன் வந்து பேச்சு நடத்தவேண்டும். பேச்சுக்காக யாராவது அழைப்பு விடுப்பார்கள் என்று நாங்கள் எதிர்பார்த்து காத்திருக்கவில்லை எனத் தெரிவித்தார்.

இந்தநிலையில் ஜல்னாவில் பா.ஜனதா நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு வெளியே வந்த முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிஸ், சிவசேனாவின் பேச்சுக்கு பதில் அளித்துள்ளார்.

அதில், பா.ஜனதா கட்சி சிவசேனாவுடன் கூட்டணி அமைக்க விரும்புகிறது. ஆனால் கண்டிப்பாக கூட்டணி வைக்கவேண்டும் என்ற கட்டாயத்தில் இல்லை. நாங்கள் இந்துத்துவா கொள்கையின் அடிப்படையிலும், ஊழலுக்கு எதிராக போராடவே கூட்டணி அமைக்க விரும்புகிறோம். 60 ஆண்டுகளாக ஏற்படுத்தப்பட்ட குண்டு, குழிகளை வெறும் 5 ஆண்டுகளில் சரிசெய்ய முடியாது. நாங்கள் இந்த வேலையைத் தொடர விரும்புகிறோம். - என்றார்.

## பன்றிக்காய்ச்சல்; 75 பேர் பலி

ஜெய்ப்பூர்,ஜன.30

ராஜஸ்தான் மாநிலத்தில் வேகமாக பரவிவரும் பன்றிக்காய்ச்சலால் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து இதுவரை 75 பேர் உயிரிழந்துள்ளனர்.

ராஜஸ்தான் மாநிலத்தின் சில மாவட்டங்களில் பன்றிக்காய்ச்சல் நோய் வேகமாக பரவி வருகிறது. குறிப்பாக, இந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கி நோயின் வீரியம் அதிகமாகக் காணப்படுகிறது.

இந்நிலையில், இந்த ஆண்டில் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து 28ஆம் திகதி வரை 1911 பேருக்கு பன்றிக்காய்ச்சல் நோய் தாக்கம் உள்ளது என கண்டறியப்பட்டுள்ளதாகவும், இம்மாதத்தில் இதுவரை 75 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் அம்மாநிலத்தின் சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பினாமி ஒழிப்புச் சட்டத்தின் கீழ் ரூ. 6,900 கோடி சொத்து முடக்கம்




பினாமி ஒழிப்பு சட்டத்தின் கீழ் ரூபா 6,900 கோடி மதிப்பிலான சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன என வருமான வரி துறை தெரிவித்துள்ளது.

வரி ஏய்ப்பு மற்றும் கறுப்பு பணம் ஒழிப்பு நடவடிக்கைக்காக பினாமி ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்த சட்டத்தின்படி, பினாமி பரிமாற்றங்கள், பினாமி நபர்கள், மற்றும் பினாமி மூலம் பலன் பெறுவோர் விசாரணைக்கு உட்படுத்தப்பட முடியும்.

பினாமி தொடர்பான விஷயங்களில் தவறான தகவல்களை அளிப்போர் பினாமி சொத்து பரிமாற்றங்கள் தடை சட்டத்தின் கீழ் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதுடன், 5 வருடம் சிறைத் தண்டனையும் விதிக்கப்படும். அவர்கள் பினாமி சொத்தின் சந்தை மதிப்பில் 10 சதவீத அபராதத் தொகையும் செலுத்த வேண்டும்.

இந்த சட்டத்தின் கீழ் இதுவரை 6 ஆயிரத்து 900 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் முடங்கப்பட்டுள்ளன என வருமான வரித்துறை தெரிவித்துள்ளது.

## இரண்டு கார்கள் மோதி விபத்து; மத்திய பிரதேசத்தில் 12 பேர் பலி



மத்தியபிரதேசத்தில் 2 கார்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 12 பேர் பலியாகியுள்ளனர். மேலும் 2 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மத்தியபிரதேச மாநிலத்தில் உள்ள உஜ்ஜைன் மாவட்டம், ராம்கார் கிராமத்தின் அருகே நேற்றுமுன்தினம் நள்ளிரவு இரண்டு கார்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. இதில், அந்த கார்களில் பயணம் செய்த 12 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மேலும் 2 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

விபத்துக்கான காரணம் தெரியாத நிலையில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இத்துயரச் சம்பவத்தில் படுகாயமடைந்த 2 பேர் சிகிச்சைக்காக அருகிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## முன்பள்ளி ஆசிரியர்கள் பணி நீக்கம்

சென்னை,ஜன.30

வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட 225 முன்பள்ளி ஆசிரியர்களை தற்காலிக பணி நீக்கம் செய்து பள்ளிக் கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

9 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி, அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் கூட்டமைப்பான ஜாக்டோ - ஜியோ அமைப்பினர் கடந்த ஒருவார காலமாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 9 மணிக்குள் பணிக்குத் திரும்ப வேண்டும் என பள்ளிக் கல்வித்துறை இறுதிக்கெடு விதித்தது.

இந்நிலையில், நேற்று 90 வீதத்திற்கும் மேலான ஆசிரியர்கள் பணிக்குத் திரும்பினர் என பள்ளிக் கல்வித்துறை தகவல் தெரிவித்தது. எனினும், சில ஆசிரியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை தொடர்ந்துள்ளனர். இந்நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டு பள்ளிகளுக்கு வராத தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் 225 பேரை தற்காலிக பணி இடைநீக்கம் செய்து பள்ளிக் கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

# மனித உரிமை செயற்பாட்டாளருக்கு சீனாவில் 4 வருட சிறைத் தண்டனை

பீஜிங்,ஜன.30

சீன அரசை கவிழ்க்க முயன்ற குற்றச்சாட்டின்கீழ் அந்நாட்டின் மனித உரிமை செயல்பாட்டாளராக திகழ்ந்த வழக்கறிஞருக்கு 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சீனாவை ஆளும் கம்யூனிஸ்ட் ஆட்சிக்கு எதிராக கருத்து தெரிவித்த பலரை அந்நாட்டு அரசு கடந்த 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கைது செய்து சிறையில் அடைத்தது. அவர்கள் மீது ஆட்சியை கவிழ்க்க சதிச்செயலில் ஈடுபட்டமை உள்பட பல்வேறு கிரிமினல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

அவ்வகையில், சீனாவின் வட கிழக்கு பகுதியில் உள்ள துறைமுக நகரமான டியான்ஜின் பகுதியில் கைதான மனித உரிமை செயல்பாட்டாளரும்



வழக்கறிஞருமான வாங் குவான்ஸாங் என்பவர் கடந்த மூன்றரை ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவரை விடுதலை செய்யக்கோரி வாங் குவாங்ஸாங்-கின் மனைவி சமூகவலைத்தளம் மூலம் பிரசார இயக்கங்களை நடத்தி வந்தார்.

இந்நிலையில், டியான்ஜின் நகர இரண்டாவது நீதிமன்றத்தில் வாங் குவாங்ஸாங் மீது தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு நான்காண்டு சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

மேலும், தண்டனைக்காலம் முடிந்து அடுத்த ஐந்தாண்டுகள்வரை அவர் தேர்தல்களில் வாக்களிக்கவும், போட்டியிடவும், பொது மேடைகளில் பேசவும், எழுதவும், அரசுப்பணிகளில் சேரவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த தண்டனைக்கு சீனாவில் உள்ள மனித உரிமை ஆர்வலர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

(ஏ)

# ரஷ்யக் கலைக்கூடத்தில் புகழ்மிக்க ஓவியம் திருட்டு



மொஸ்கோ,ஜன.30

ரஷ்ய நாட்டின் கலைக்கூடத்தில் பார்வையாளர்கள் கூடியிருந்த வேளை ஓவியம் திருடப்பட்டதாக தெரியவந்துள்ளது.

ரஷ்யநாட்டின் புகழ்மிக்க கலைக்கூடங்களில் ஒன்று மொஸ்கோ பகுதியில் உள்ளது. இக்கலைக்கூடத்தில், பல்வேறு நாட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் தினமும் வருகை தந்து, இங்குள்ள சிறப்பு வாய்ந்த ஓவியங்களை பார்வையிட்டு செல்வது வழக்கம்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் காலையில், பார்வையாளர்கள் பலர் கூடியிருந்தபோது புகழ்மிக்க ஓவியம் ஒன்று திருடப்பட்டுள்ளது. கலைக்கூடத்தில் ஏரா எமான மக்கள் இருந்தபோதும் இச்சம் பவம் நடந்துள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணை யில், ஓவியத்தை திருடி சென்றவர், அந்த கலைக்கூடத்தில் பணிபுரியும் ஊழியர் போல் தென்பட்டார் என்றும், அவர் பதற்றம் ஏதும் இன்றி ஓவியத்தை எடுத்துச் சென்றார் என்றும் பார்வையாளர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் இந்த நபரை ரஷ்ய பொலிஸார் சிசிடிவி மூலம் அடையாளம் கண்டனர். இதனையடுத்து ஓவியத்தைக் கைப்பற்றி அவரை கைது செய்துள்ளனர்.

# வெனிசூலா எண்ணெய் நிறுவன தடை: தளர்த்த அமெரிக்கா புதிய நிபந்தனை

வொஷிங்டன்,ஜன.30

வெனிசுலா நாட்டில் உள்ள மிகப்பெரிய எண்ணெய் நிறுவனம் மீதான தடையை தளர்த்துவதற்கு, அமெரிக்கா புதிய நிபந்தனையை விதித்துள்ளது.

அமெரிக்க நிதி அமைச்சு செயலர் ஸ்டீவன் மனுச்சின் வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது, வெனிசுலா அதிபர் மதுரோ, தற்காலிக அதிபராக அறிவித்துள்ள ஜுவான் கெய்டோவிடம் அதிகாரத்தை ஒப்படைக்கும் திட்டத்தை ஏற்றுக்கொண்டால், மிகப்பெரிய எண்ணெய் நிறுவனமான பிடிவிஎஸ்ஏ மீதான தடைகளை அமெரிக்கா தளர்த்தும் என்று கூறினார்.

பிடிவிஎஸ்ஏ நிறுவனம் மீது நேற்றுமுன்தினம் புதிய பொருளாதார தடைகளை அமெரிக்கா விதித்தது குறிப்பிடத்தக்கது.




# ஆப்கன் எல்லையில் நீண்ட தூரவேலி அமைக்கிறது பாகிஸ்தான் இராணுவம்

இஸ்லாமாபாத்,ஜன.30

ஆப்கன் எல்லையில் 2,600 கிலோ மீற்றர் நீளத்துக்கு வேலி அமைக்கும் பணி அடுத்த ஆண்டு முடியும் என பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் ஆசிப்கபூர் கூறுகையில்; ஆப்கனிஸ்தான் - பாகிஸ்தான் இடையே 2,600கி.மீற்றர் நீளத்துக்கு முழுமையான வேலி அமைக்கும் பணி நடந்து வருகிறது. இதில், 900கிமீ வேலிக்கான பணி முடிந்து விட்டது. எஞ்சியுள்ள தூரத்துக்கான பணிகள் அடுத்த ஆண்டுக்குள் முடிந்து விடும்.

இந்த வேலியில் கண்காணிப்பு கமராக்களும் பொருத்தப்பட்டு,



ஆப்கானிஸ்தானில் இருந்து சட்ட விரோதமாக நுழையும் தீவிரவாதிகளின் நடமாட்டம் கண்காணிக்கப்படும். எல்லையில் வேலி அமைக்கப்படும் பணி முழுமையாக முடிந்த பின்னர், தீவிரவாதிகள் சட்ட விரோதமாக பாகிஸ்தானில் நுழைவது முழுமையாகத் தடுக்கப்படும். - என்றார்.

# செவ்வாய் கிரகத்தில் புயல்; செயலிழந்தது 'ரோவர்'


வொஷிங்டன்,ஜன.30

செவ்வாய் கிரகத்துக்கு நாசா அனுப்பிய ரோவர் விண்கலம் அங்கு ஏற்பட்ட புயல் காரணமாக காணாமல் போன நிலையில் தற்போது அது முழுமையாக செயலிழந்துவிட்டதாக நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

செவ்வாய் கிரகத்தில் மனிதன் வாழ்வதற்கான சூழ்நிலைகள் குறித்து ஆய்வு செய்வதற்காக அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா சார்பில் கடந்த 2003 ஆம் ஆண்டு ஒபச்சுனிட்டி என்ற ரோவரை டெல்டா 2 ரொக்கெட் மூலம் நாசா அனுப்பியது.

செவ்வாய் கிரகத்தில் முதன் முதலில் தடம் பதித்த இந்த ரோவர், லேசர் மூலம் செவ்வாய் கிரகத்தில் உள்ள பாறைகளை துளையிட்டு மாதிரிகளைச் சேகரித்து வந்தது. அத்துடன் தொடர்ந்து 15 ஆண்டுகளாக ரோவர் சிறப்பாக செயல்பட்டு செவ்வாய் கிரகம் சார்ந்த பல புகைப்படங்களை பூமிக்கு அனுப்பி வந்தது.

இந்நிலையில் கடந்த 7 மாதங்களுக்கு முன்பு இந்த ரோவர் காணாமல் போனது.



செவ்வாய் கிரகத்தில் வீசிய புயலில் சிக்கிய அந்த விண்கலம் புயலுக்கு பிறகு காணாமல் போனது. அந்த விண்கலம் எங்குள்ளது என்ற விவரம் தெரியாமல் நாசா விஞ்ஞானிகள் குழப்பத்தில் மூழ்கினர். ஆனால் புயலின் வேகம் குறைந்து சராசரி நிலையை எட்டிய போது, ரோவர் விண்கலம் தென்பட்டதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர். ஆனால் அந்த விண்கலம் முழுமையாக செயலிழந்து விட்டதாகவும் அதனுடைய சிக்னல் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்கா செல்லும் சீன துணைப் பிரதமருடன் வர்த்தக பேச்சை நடத்துவார் ஜனாதிபதி ட்ரம்ப்

வொஷிங்டன்,ஜன.30

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நாளைய தினம் சீன துணை பிரதமருடன் வர்த்தக பேச்சுவார்த்தையை நடத்த உள்ளார்.

அமெரிக்கா மற்றும் சீனா நாடுகளுக்கு இடையே வர்த்தக போர் இருந்து வந்தது. இதனால் சர்வதேச அளவிலான பொருளாதாரத்தில் தேக்க நிலை ஏற்பட்டது.

அமெரிக்கா, சீன இறக்குமதிகள் மீது தொடர்ந்து கூடுதல் வரி விதிப்பை அறிவித்தது. சீனாவும் பதிலுக்கு அமெரிக்க பொருட்கள் மீதான வரிவிதிப்பை உயர்த்தியது.

இந்த நிலையில், இரு தரப்பு வர்த்தக போரை தற்காலிகமாக நிறுத்தும் வகையில், ஜனவரி 1ம் திகதி முதல் இரு நாடுகளும் கூடுதல் வரிகளை விதிப்பது இல்லை என்று உடன்பாடு செய்து கொண்டன. இது 90 நாள்களுக்கு நீடிக்கும் என அறிவிக்கப்பட்டது. இதனால் அமெரிக்கா, சீனா இடையே நீடித்து வந்த வர்த்தகப் போர் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

இந்த நிலையில், அமெரிக்காவில் உள்ள வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பு பெண் அதிகாரி சாரா ஹக்காபீ சான்டர்ஸ் செய்தியாளர்கள் சந்திப்பில் வெளியிட்டுள்ள செய்தி ஒன்றில், சீனாவின் துணைப் பிரதமர் லியு ஹீ இந்த வாரம் அமெரிக்காவுக்கு வருகை தருகிறார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அவரை சந்தித்து வர்த்தக விவகாரங்கள் பற்றி பேச்சுவார்த்தை நடத்த உள்ளார் என்று தெரிவித்துள்ளார்.



# ஆனையிறவு பாலம் மீளவும் அமைப்பு நான்காயிரம் குடும்பங்கள் பாதிப்பு

## வடக்கு ஆளுநருக்கு மகஜர்




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஜன.30

ஆனையிறவு ஏ-9 வீதியில் முன்னர் அமைக்கப்பட்டிருந்த பாலம் வீதி புனரமைப்பின் மீண்டும் அமைக்கப்பட்டுள்ளதனால் ஆனையிறவு, பூநகரி, கிளாலி, கச்சாய்,கரைச்சி, கண்டாவளை உட்பட 41 கிராமங்களைச் சேர்ந்த 4 ஆயிரம் குடும்பங்கள் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக அவர்களின் வாழ்வாதாரமான மீன்பிடி மற்றும் விவசாயத்தை மேற்கொள்ள முடியாமல் முற்றாக வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

இதற்கான தீர்வினை பெற்றுத்தரக் கோரி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வடக்குமாகாண ஆளுநர் செயலகத்தில் மகஜர் ஒன்றை கையளித்தனர்.

அவர்கள் கையளித்த மகஜரில் குறிப்பிட்டுள்ளதாவது:-

காலங்காலமாக அதிக மீன்வளம் காணப்படும் பகுதியாக ஆனையிறவு பகுதி உள்ளது. இந்த பகுதியில் சமுத்திர கடலும் சேத்துக்கடலும் இணைவதால் இப்பகுதியில் கடல் வாழ் உயிரினங்கள் அதிகமாக உள்ளன.

முல்லைத்தீவுக்கடலும் சங்குப்பிட்டிக் கடலும் சேரும் இடத்தை ஊடறுத்து ஏ-9 பாதையும் ரயில்பாதையும் செல்கின்றன. ஏ-9 வீதியில் மக்கள் போக்குவரத்துக்காக அமையப்பெற்ற இப்பாலமானது முல்லைத்தீவு கடல் மற்றும் கேரதீவு கடல் நீரோட்டத்துக்காக 1962ஆம் ஆண்டு ஆவணி மாதம் 30ஆம் திகதி நிரந்தர பாலம் அமைக்கப்பட்டு காணி விவசாய நீர்ப்பாசன அமைச்சர் சீ.பி.டி.சில்வாவினால் திறந்து வைக்கப்பட்டது.

இப்பாலம் 1974ஆம் ஆண்டளவில் செப்பனிடும் பொழுதும் அகற்றப்பட்டு நீரோட்டம் தடைப்பட்டுள்ளது. 1962ஆம் ஆண்டு இப்பாதை போடப்பட்ட பொழுது கடல்நீர் ஊடறுத்து செல்வதற்குரிய குழாய்கள் அங்கு பொருத்தப்பட்டிருந்தன.

சமுத்திரக்கடல் நீர் சேத்துக்கடலுக்கு செல்லும் போது அங்குள்ள மீனினங்களும் செல்கின்றன. அத்தோடு கடல்நீர் வெள்ளப் பெருக்கு காலத்தில் வந்து வற்றுக்காலத்தில் மீளத்திரும்பி செல்வதால் சேத்துக்கடலின் உவர்தன்மையும் நீருடன் கலந்து சமுத்திரக்கடலுக்கு செல்கின்றது.

மேலும் இந்தப் பகுதியில் வாழ்ந்த மக்கள் அனைவரினதும் வாழ்வாதாரமும் கடற்றொழிலையே நம்பி இருந்ததால் அவர்கள் நிறைவாழ்வு வாழ்ந்து வந்தார்கள்.

பின்னர் 1974ஆம் ஆண்டு பாதை செப்பனிடும்போது முறையான ஆய்வுகளும், ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்படாமையினால் பாதை மூடப்பட்டது. இதனால் இப்பகுதியில் உள்ள சிறுகடல் மீனவர்கள் பாதிப்புகளை எதிர்நோக்கி வந்தனர்.

அத்தோடு சூழல் பாதிப்புகளான வறட்சி, வெப்பம் அதிகரித்தல் உவர்த்தன்மை அதிகரிப்பினால் கண்டல் தாவரம் அழிவடைந்தமை, அங்கு வாழும் மக்கள் நோய்த்தாக்கங்களுக்கு உள்ளாகியமை போன்ற சூழலியல் பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்தனர்.

தொடர்ந்து உள்நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இதில் கவனம் செலுத்தவில்லை. பின்னர் ஏ-9பாதை ரயில்பாதை புனரமைப்பின் போதும் இது கவனத்தில் கொள்ளப்படவில்லை.

ஆனையிறவு பாலத்தை ஊடறுக்கும் ஆற்றுத்தொடுவாய் யாழ்நகரைச் சுற்றி பண்ணைப்பாலம் கல்முனை அரியாலை, சங்குப்பிட்டிப்பாலம் கிளாலி ஆனையிறவு, சுண்டிக்குளம், பூனையம்தொடுவாய் வழியாக சமுத்திரத்தை சென்றடைந்து மீள்சுழற்சியில் சுற்றிவரும். இதனால் மக்களுடைய வாழ்வாதாரமும் நிறைவாக இருந்தது.

குடிதண்ணீர் பிரச்சினைகளும் ஏற்படவில்லை அத்தோடு கடல்பகுதி அளவுக்கதிகமாக தரவையாக மாறவும் இல்லை. தற்போது வடமாகாணத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி மற்றும் வெள்ளம் காரணமாக மீண்டும் இப்பாலம் தொடர்பான பிரச்சினை எழுந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி, கரைச்சி கண்டாவளை மற்றும் பூநகரி ஆகிய பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிட்டத்தட்ட 41 கிராமங்களை சேர்ந்த 3500 தொடக்கம் 4000 விவசாயிகள் மற்றும் மீனவர்கள் தமது வாழ்வாதார ரீதியில் பெரும் பாதிப்புகளையும் பிரச்சினைகளையும் எதிர்நோக்கியுள்ளனர்.

இயற்கையான ஆற்றுநீரோட்ட சுழற்சியை தடுத்தமையினால் கீழ்வரும் பிரச்சினைகளை இப்பகுதியில் வாழும் மீனவர்களும், விவசாயிகளும் எதிர்நோக்குகின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் சிறுகடல் நீரில் உப்புத்தன்மை அதிகரித்துள்ளமை, இப்பகுதிக் கிணறுகளிலிருந்து பாவிக்கப்பட்டு வந்த குடிதண்ணீர் உவர்தன்மையாகியதுடன் சிவப்புக் காவி படிந்துள்ளமை.

பெரும்கடல் மீனினம் இப்பகுதிக்கு வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளமை,

கடல் தாவரங்கள், சங்கினங்கள் சிப்பியினங்கள் அழிந்துள்ளமை.

கோடை காலங்களில் கடல்நீரின் நிலைவற்றும் வேளையில் வெப்ப அதிகரிப்புடன் தரவையும் உருவாகின்றது. தரவையில் உள்ள தூசுகள் மாசுக்கள் காற்றின் வேகத்திற்கேற்ப இப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு சுற்றாடல் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்று மகஜரில் மேலும் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளது. (ஏ)

# பொய்யான பிரசாரங்களை முன்னெடுக்கிறது கூட்டமைப்பு

## குற்றஞ்சாட்டுகிறார் அங்கஜன்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஜன.30

தேர்தல்கள் நெருங்குவதால் தற்போது பொய்யான பிரசாரங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்னெடுப்பதாக குற்றஞ்சாட்டியுள்ள சிறிலங்கா சுதந்திர கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதி விவசாய அமைச்சருமான அங்கஜன் இராமநாதன் இவ்வாறே காலத்துக்கு காலம் கூட்டமைப்பு செய்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பு எதிர்க்கட்சியாக இருந்தாலும் ஆளும் கட்சியாகவே செயற்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ள அங்கஜன் தற்போது கூட்டமைப்புடன் சுருதி மாறி ஐக்கிய தேசியக் கட்சியினரும் தம்மை ஏமாற்றி விட்டனர் எனக் கூறத் தொடங்கியுள்ளதாகவும் சாடியுள்ளார்

தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வேலைத் திட்டத்திற்கமைய மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்தரங்கு யாழ்ப்பாணம் கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் நா.சிவசிதம்பரம் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந் நிகழ்வில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதன் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார். இதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலையே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன் போது மேலும் தெரிவிக்கையில்;

கம்பெரலிய திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தாலும் அதில் அரசதரப்பினருக்கு மாத்திரமே முக்கியத்துவம் வழங்கப்பட்டு அவர்களின் திட்டங்கள் சிபாரிசுகளுக்கு அமையவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிபாரிசுகள் முன்மொழிவுகள் திட்டங்கள் என்பனவே செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்போதைய அரசியல் நிலைமைகளை பொறுத்தவரையில் ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் தங்களை ஏமாற்றிவிட்டதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு கூற ஆரம்பித்துள்ளது. ஆனால் உண்மையில் அவர்கள் காலத்துக்கு காலம் தேர்தல் வரும்போது தேர்தலுக்காக பொய்யான பிரசாரங்களை முன்னெடுப்பார்கள்.

அதேபோன்று தற்போதும் மக்களுக்காக எதையும் செய்யாமல் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட்ட கூட்டமைப்பு இன்றைக்கு தங்களை அக்கட்சியினர் ஏமாற்றிவிட்டனர் எனக் கூறுவது வேடிக்கையானது. எனவே தேர்தல் நேரங்களில் இவ்வாறு கூறுவது பொருத்தமற்றதாகவே உள்ளது. ஆகவே மக்கள் இதனை சரியான முறையில் விளங்கிக் கொள்ள வேண்டும். - என்றார். (ஏ)

# வனவள திணைக்கள காணி அபகரிப்புக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு



கிளிநொச்சி ஜெயபுரம் பகுதியில் 1990ஆம் ஆண்டு மக்களுக்கு வழங்கப்பட்ட சுமார் 548 ஏக்கர் விவசாய மற்றும் குடியிருப்பு காணிகளை வனவளத் திணைக்களம் வனப்பகுதி என அடையாளப்படுத்தி காணிகளுக்குள் மக்கள் செல்வதை தடுத்துள்ளது.

இந்நிலையில் பாதிக்கப்பட்டுள்ள காணி உரிமையாளர்கள் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் ஜெயபுரம் வடக்கு கமக்கார அமைப்பு முறைப்பாட்டை பதிவு செய்துள்ளது. இதற்கமைய காணித் திணைக்களம் மற்றும் வனவளத்திணைக்கள அதிகாரிகளும் நேற்று விசாரணைக்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்த விசாரணைகளின் பின்னர் ஜெயபுரம் வடக்கு கமக்காரர் அமைப்பின் தலைவர் அரசப்பன் ராமர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் -

1990ஆம் ஆண்டு 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்காக ஜெயபுரம் பகுதியில் சுமார் 548 ஏக்கர் காணி வழங்கப்பட்டிருந்தது.

யுத்த நிலைமைகளால் அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றமையுடன் இந்தியாவுக்கும் இடம் பெயர்ந்து சென்றிருந்தனர்.

மீண்டும் 2010 ஆம் ஆண்டு மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பி தமது காணிகளை துப்புரவு செய்தபோது அப்பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றப்படாமல் இருக்கின்றன என கூறிய இராணுவம் மக்களை மீள்குடியேறவிடாமல் தடுத்தது.

மீண்டும் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு 2017 ஆம் ஆண்டு காணிகள் மக்களிடம் கையளிக்கப்பட்டபோது. அந்த காணிகளை துப்புரவு செய்வதற்கு மக்கள் வசதியற்றவர்களாக இருந்தனர் இந்நிலையில் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனுடன் தொடர்பு கொண்டு மக்கள் விடயத்தைக் கூறி இருந்தனர்.

இதற்கமைய சுமார் இரண்டு மில்லியன் ரூபா நிதியை மீள்குடியேற்ற அமைச்சின் ஊடாக பெற்று பூநகரி பிரதேச செயலரிடம் கையளித்திருந்தார். பிரதேச செயலர் அந்த நிதியை ஜெயபுரம் வடக்கு கமக்கார அமைப்பினூடாக மக்களுக்கு கையளித்த நிலையில் சுமார் 70 ஏக்கர் நிலம் அந்த நிதியின் ஊடாக திருத்தி அமைக்கப்பட்டது.

இந்நிலையில் அங்கு வந்த வனவளத் திணைக்களம் குறித்த பகுதி தமது ஆளுகைக்குட்பட்ட வனப்பகுதி எனக் கூறிய மக்களை காணிகளுக்குள் போகவிடாது தடுத்தனர்.

ஆனாலும் அந்தப் பகுதியில் தற்போது செல்வந்தர்கள் சிலர் வனவளத் திணைக்களத்தின் அனுசரணையுடன் விவசாயம் செய்து வருகின்றனர் இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக பூநகரி பிரதேச செயலரின் கவனத்துக்கு கொண்டு சென்ற போதும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு எமது காணிகளை எம்மிடம் பெற்றுக் கொடுக்குமாறு கேட்டு மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளோம். - என்றார்.

# வடக்கில் மீண்டும் புலிகளை உருவாக்குகிறது ரணில் அரசு!

## ரோஹித அபேகுணவர்தன குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.30
வடக்கில் மீண்டும் புலிகளை ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசு உருவாக்குகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–
வடக்கில் மீண்டும் விடுதலைப் புலிகள் அமைப்பு தோன்றுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. யுத்தம் நிறைவடைந்த பின்னர் இயங்காதிருந்த அந்த அமைப்பு கடந்த நான்கு ஆண்டுகால ஆட்சியில் மீண்டும் தலைதூக்கியுள்ளது.

இந்த அரசு நாட்டினது பாதுகாப்புக் குறித்து எந்த அக்கறையுமின்றிச் செயற்படுவதையே நாம் காணக்கூடியதாக உள்ளது. நாம் தொடர்ந்தும் இந்த அரசின் செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது.

நாட்டில் மீண்டும் விடுதலைப் புலிகள் அமைப்பு தோன்றுமாயின் பல பாரதூரமான அழிவிற்குரிய விடயங்கள் நாட்டில் இடம்பெறுவதற்கான நிலைமைகள் தோன்றும்– என்றார். (ஐ)



# குற்றச்சாட்டுகளிலிருந்து ஜோன்ஸ்டன் விடுதலை



கொழும்பு, ஜன. 30
முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அவருக்கு எதிரான வழக்கொன்றிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அமைச்சராக இருந்த காலப் பகுதியில் தனது சொத்து விவரத்தைச் சமர்ப்பிக்க தவறினார் எனத் தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலிருந்தே அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டுமுதல் 2014ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கூட்டுறவு மற்றும் வர்த்தக அமைச்சராக இருந்த ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தனது சொத்து விவரத்தைச் சமர்ப்பிக்க தவறினார் எனத் தெரிவித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டு ஒப்பந்தத்தை உடனே ரத்து செய்க!

## அமைச்சர் மனோ கோரிக்கை



கொழும்பு, ஜன. 30
கைச்சாத்திடப்பட்டுள்ள கூட்டு ஒப்பந்தத்தை உடன் இரத்துச் செய்யுமாறு அமைச்சர் மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடும் எதிர்ப்புகளையும் மீறி 700 ரூபா அடிப்படைச் சம்பளத்துடன் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. நேற்று முன் தினம் திங்கட்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இது தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அமைச்சர் மனோ கணேசன் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–
இந்த கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தரப்பினர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு அலரிமாளிகைக்குச் சென்று முன்னெடுத்த கலந்துரையாடலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் உடன் இருந்தமை கவலையளிக்கின்றது.

700 ரூபா போதுமானதல்ல, குறைந்தது 1000 ரூபாயே எமது கோரிக்கை. இதில் எவ்வித மாற்றமுமில்லை. சம்பள அதிகரிப்பு ஊடாக அவர்களின் வருமானத்தை அதிகரிக்க முடியாதெனின் அதற்கான மாற்றுத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும்.

இதில் அரசு இவ்வளவு நாள்களும் தலையிடாமல் இருந்தமைக்கான காரணம் பெருந்தோட்ட நிறுவனங்கள் மற்றும் தொழிற்சங்கங்களுக்கிடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமாகும்.

இந்தநேரத்தில் நாடளாவிய ரீதியில் இந்தச் சம்பள அதிகரிப்புக்காகப் போராடும் மக்களுடன் நாமும் கைகோர்ப்போம். இது தொடர்பாக அரசாங்கத்தின் சில முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளோம்– என்றார். (ஐ)

# மிளகு இறக்குமதி நிறுத்தம்



கொழும்பு, ஜன. 30
உள்நாட்டு மிளகு உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் நோக்கில், வெளிநாடுகளிலிருந்து மிளகு இறக்குமதி செய்வதை முற்றாக நிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக விவசாய அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்தார்.

என்டபிரைசஸ் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின்கீழ் தம்புள்ளை பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்குக் கடனுதவிகளை வழங்கும் நிகழ்வில் நேற்று முன் தினம் பங்கேற்று உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில், தாம் இந்தத் தீர்மானத்தை எடுத்ததாகவும் அவர் கூறினார்.

அத்துடன், உள்நாட்டு உழுந்து உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் வகையில், இறக்குமதி செய்யப்படும் உழுந்து கிலோ ஒன்றுக்காக ரூ.200 வரி விதிக்கப்படுமென குறிப்பிட்ட அமைச்சர் பீ.ஹரிசன், மரக்கறி ஏற்றிச் செல்லும் லொறிகளைக் கொள்வனவு செய்வதற்காக என்டபிரைசஸ் ஸ்ரீ லங்கா கடன் வேலைத்திட்டத்தின் ஊடாக, கடன் வசதிகளை வழங்குவதற்கு நிதியமைச்சில் தாம் கோரியுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# திருமலைத் துறைமுகத்தை நவீனப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, ஜன. 30
திருகோணமலைத் துறைமுகத்தை நவீனப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அமைச்சர் சாகல ரத்நாயக்க இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–
திருகோணமலை மற்றும் காலித் துறைமுகங்களில் வாரத்தில் 7 நாள்களும், 24 மணி நேரமும் செயற்படும் வகையில் இந்த ஆண்டு இறுதிக்குள் சிறப்பு வசதிகள் செய்யப்படவுள்ளன.

திருகோணமலையை ஓர் ஏற்றுமதி வாய்ப்புள்ள கேந்திர நிலையமாக இலங்கை அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளது. எனவே, சரக்குக் கப்பல்களைக் கையாளுவதற்கான மேலும் வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

இதற்காக, இரவு நேரத்திலும், துறைமுகம் செயற்படக் கூடிய வகையில் புதிய ரேடார் கருவி பொருத்தப்படவுள்ளதுடன், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளும் செய்யப்படவுள்ளன.

இயற்கைத் துறைமுகமான திருகோணமலையை பொருளாதார வாய்ப்பாகப் பயன்படுத்தும் வகையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் இரவில் இயங்கக் கூடிய வசதி செய்யப்படும்.

ஜப்பானின் அனைத்துலக கூட்டுத்தாபனத்தின் 100 கோடி யென் உதவியுடன் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். காலித் துறைமுகமும் இரவு நேரத்தில் செயற்படும் வகையில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது–என்றார். (ஐ)

# இனவாதத் தீ பற்றிக்கொண்டால் அது பேராபத்தை விளைவிக்கும்

## சபாநாயகர் கரு எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 30
நாட்டில் மீண்டும் இனவாதத் தீ பற்றிக் கொண்டால் அது பேராபத்தை விளைவிக்கும் எனச் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

புத்தளம் ஆனமடு பகுதியில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-
இந்த நாட்டில் மீண்டும் இனவாதம், மதவாதம் மெல்ல மெல்ல தலைத்தூக்குகின்றது. எந்தவொரு நாட்டிலும், இனவாதம், மதவாதம் தலை தூக்கினால் அந்த நாட்டின் எதிர்காலம் இல்லாமல் போய்விடும்.

புத்த பெருமானும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இனம் குறித்து பேசியதில்லை. அவர் எல்லோரும் ஒரே இனம் அது மனித இனம் என்றே கூறியுள்ளார்.



வேறு எந்தவொரு மதத்திலும் இனவாதம், மதவாதம் குறித்து குறிப்பிடுவதில்லை.

இந்த இடத்தில் அரசியல்வாதியாக இந்த நாடு மீண்டும் தீப்பற்றிக் கொண்டால் காப்பாற்ற முடியாது என்று கூறுகிறேன்.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம், சம்பவம் ஒன்று நடைபெற்றது. குறிப்பாக முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டனர். அந்தச் சந்தர்ப்பத்தில் நாம் உடனடியாக முன்னிலையாகி கண்டிக்குச் சென்று மதத் தலைவர்களைச் சந்தித்து, பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து நிலைமையைக் கட்டுப்படுத்தினோம்.

எனவே நாம் இலங்கையர்கள் என்ற வகையில் எங்களுக்குள் குரோதம், பகை இல்லாமல் வாழும் நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். நாம் இரத்தம், உடலுறுப்பு தானம் வழங்கும் போது, இனம், மதம் பார்ப்பதில்லை-என்றார். (ஐ)




## இந்திய மகளிர் அணியும் நியூஸிலாந்தில் சாதனை

நேப்பியர்,ஜன.30

நியூசிலாந்துக்கு எதிரான 2 ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 8 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய மகளிர் அணி வெற்றி பெற்று தொடரையும் கைப்பற்றியது.

மிதாலிராஜ் தலைமையிலான இந்திய பெண்கள் கிரிக்கெட் அணி, நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 3 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நேப்பியரில் நடந்த முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்தை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.

இந்த நிலையில் இவ்விரு அணிகள் இடையிலான 2 ஆவது ஒருநாள் போட்டி நேற்று மவுன்ட் மாங்கானுவில் நடந்தது

இந்த போட்டியில் 8 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய மகளிர் அணி வெற்றி பெற்றது. நியூசிலாந்து அணி நிர்ணயித்த வெற்றி இலக்கான 162 ரன்களை 2 விக்கெட்டுகள் மட்டுமே இழந்து 35.2 ஓவரில் எட்டியது.

3 போட்டிகள் கொண்ட தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது இந்திய மகளிர் அணி.

### தொடர் தோல்வியின் எதிரொலி:

## நியூஸிலாந்து அணியில் இரு வீரர்கள் இணைப்பு




இந்தியாவுடனான ஒருநாள் தொடரை 3-0 என்று இழந்த நியூஸிலாந்து அணி கடைசி 2 போட்டிகளுக்காக இரண்டு வீரர்களை அணிக்குள் அழைத்துள்ளது.

மோசமாக வீசி வரும் டக்கி பிரேஸ்வெலுக்குப் பதிலாக அதிரடி சகலதுறைவீரர் ஜேம்ஸ் நீம் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலும் டாட் ஆஸ்ட்ல் அணிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

காயத்தால் அவதிப்பட்டு வந்த அதிரடி சகலதுறைவீரர் ஜேம்ஸ் நீம் மற்றும் காயத்தால் ஆட முடியாமல் போன லெக்ஸ்பின்னர் டாட் ஆஸ்ட்ல் ஆகியோர் அணிக்குத் திரும்பியுள்ளனர்.

ஜேம்ஸ் நீம் இதுவரை 44 ஒருநாள் போட்டிகளில் ஆடி 934 ஓட்டங்களை எடுத்துள்ளார். பந்துவீச்சில் 40 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். கடைசியாக இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரில் ஜேம்ஸ் நீம் 47 , 64 என்று அதிரடி இன்னிங்ஸ்களை ஆடியுள்ளார்.

கடைசி 2 போட்டிகளுக்கான நியூஸிலாந்து அணி வருமாறு:

கேன் வில்லியம்சன், டாட் ஆஸ்ட்ல், ட்ரெண்ட் போல்ட், கொலின் டிகிராண்ட்ஹோம், லாக்கி பெர்கூசன், மார்ட்டின் குப்தில், மேட் ஹென்றி, டொம் லாதம், கொலின் முன்ரோ, ஜேம்ஸ் நீம், ஹென்றி நிகோல்ஸ், மிட்செல் சாண்ட்னர், டிம் சவுத்தி, ரோஸ் டெய்லர்.

## அம்பதிராயுடுவுக்கு தடை

இந்திய கிரிக்கெட் அணியின் துடுப்பாட்டவீரரும், பகுதிநேர பந்துவீச்சாளருமான அம்பதி ராயுடு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பந்துவீசுவதற்கு இடைக்காலத் தடைவிதித்து ஐசிசி உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து ஐசிசி வெளியிட்ட அறிக்கையில், கடந்த 13 ஆம் திகதி சிட்னியில் நடந்த ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் இந்திய வீரர் அம்பதி ராயுடு பந்துவீச்சில் சந்தேகம் எழுந்தது.

ஐசிசி வழங்கிய 14 நாட்கள் அவகாசத்தில் இந்திய வீரர் அம்பதி ராயுடு தனது பந்துவீச்சைச் சோதனைக்கு உட்படுத்தி சந்தேகத்தை நிவர்த்தி செய்யவில்லை. ஆதலால், ஐசிசி விதி 4.2ன்படி, உடனடியாக அம்பதி ராயுடு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பந்துவீசத் தடை விதிக்கப்படுகிறது. அம்பதி ராயுடு தனது பந்துவீச்சை சோதனைக்கு உட்படுத்தித் தெளிவுபடுத்தும் வரையிலும், சட்டபூர்வ அனுமதி வழங்கும் வரையிலும் இந்த தடை அமுலில் இருக்கும். அதேசமயம் அவர் உள்நாட்டுப் போட்டிகளில் பந்துவீச எந்தவிதமான தடையும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 7 ஆவது ரி- 20 உலகக்கிண்ண போட்டி அட்டவணை வெளியீடு

துபாய்,ஜன.30

ஆஸ்திரேலியாவில் அடுத்த ஆண்டுநடைபெறஉள்ளருவென்ரி 20உலகக்கோப்பைக்கான போட்டி அட்டவணையை ஐசிசி நேற்று வெளியிட்டது.

ரி20 உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியை ஐசிசி 2007 இல் அறிமுகப்படுத்தியது. அறிமுக உலகக்கோப்பையில் இந்தியா சம்பியன் பட்டம் பெற்றது. 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை 20 ஓவர் உலகக்கோப்பை போட்டி நடைபெற்று வருகிறது.

2009 இல் பாகிஸ்தானும், 2010 இல் இங்கிலாந்தும், 2012 இல் மேற்கிந்தியாவும் 2014 இல்




இலங்கையும், 2016 இல் மேற்கிந்தியாவும் உலகக்கோப்பையை கைப்பற்றின.

7ஆவதுரி20உலகக்கோப்பை போட்டி ஆஸ்திரேலியாவில் அடுத்த ஆண்டு (2020) ஒக்டோபர் 18 ஆம் திகதி முதல் நவம்பர் 15 ஆம் திகதி வரை நடக்கிறது. இந்த போட்டிக்கான அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐசிசி)நேற்று வெளியிட்டது.

ஐசிசி தரவரிசையில் முதல் 8 இடங்களில் உள்ள அணிகள் நேரடியாக தகுதி பெற்றுள்ளன. 9 ஆவது மற்றும் 10 ஆவது இடங்களில் உள்ள இலங்கை, பங்காளதேஷ் மற்றும் 6 இதர அணிகள் தகுதி சுற்றில் விளையாட வேண்டும். இதில் இருந்து 4 அணிகள் தகுதி பெறும்.

இரண்டு பிரிவிலும் இடம் பெற்றுள்ள அணிகள் வருமாறு:-

'ஏ' பிரிவு: பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, மேற்கிந்தியா, நியூசிலாந்து, தகுதிபெறும் அணிகள்.

'பி' பிரிவு: இந்தியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, ஆப்கானிஸ்தான், தகுதிபெறும் அணிகள்.

அரையிறுதி ஆட்டம் நவம்பர் 11,12 ஆம் திகதிகளிலும் இறுதி ஆட்டம் நவம்பர் 15 ஆம் திகதியிலும் நடைபெறவுள்ளன.

## முதலிடத்தில் நவோமி ஒசாகா



ஆஸ்திரேலிய ஓபனில் கிண்ணம் வென்ற ஜப்பான் வீராங்கனை நவோமி ஒசாகா முதல் இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் இந்த ஆண்டின் முதல் கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் தொடரான ஆஸ்திரேலிய ஓபன் நடைபெற்றது. பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ஜப்பானைச் சேர்ந்த நவோமி ஒசாகா - செக் குடியரசின் பெட்ரா கிவிட்டோவா பலப்பரீட்டை நடத்தினர்.

இதில் நவோமி ஒசாகா சாம்பியன் பட்டம் வென்றார். இதன்மூலம் 3 இடங்கள் முன்னேறி முதல் இடத்தைப் பிடித்துள்ளார். ஜப்பான் வீராங்கனை ஒருவர் டென்னிஸ் தரவரிசையில் இடம் பிடிப்பது இதுவே முதல்முறையாகும்.

பெட்ரா கிவிட்டோவா 4 இடங்கள் முன்னேறி 2 ஆவது இடத்தை பிடித்துள்ளார். முதல் இடத்தில் இருந்த சிமோனா ஹாலெப் இரண்டு இடங்கள் சரிந்து 3 ஆவது இடத்துக்கு பின்தங்கியுள்ளார்.

## இலங்கை அணியில் புதுமுக வீரர் இணைவு



கொழும்பு,ஜன.30

ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக பிரிஸ்பேனில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் உபாதைக்குள்ளாகிய வேகப்பந்து வீச்சாளர் லஹிரு குமாரவுக்கு பதிலாக, புதுமுக வேகப்பந்து வீச்சு சகலதுறை வீரர் சாமிக கருணாரத்ன இலங்கை அணியுடன் இணையவுள்ளார்.

சாமிக கருணாரத்ன 29 முதற்தர போட்டிகளில் விளையாடி 34.16 என்ற சராசரியில் 59 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளதுடன், ஒரு சதம் மற்றும் 7 அரைச் சதங்கள் அடங்கலாக 998 ஓட்டங்களை குவித்துள்ளார்.

அதேநேரம், சாமிக கருணாரத்ன இறுதியாக அயர்லாந்து A அணிக்கு எதிரான நான்கு நாள் டெஸ்ட் போட்டியில், 3 விக்கெட்டுகளை வீழ்த்தியதுடன், 100 ஓட்டங்களை விளாசி இலங்கை அணியை தோல்வியிலிருந்து காப்பாற்றியிருந்தார். அதுமாத்திரமின்றி, கடந்த சில மாதங்களாக உள்ளூர் போட்டிகளில் சிறந்த ஆட்டங்களை வெளிப்படுத்தி வருவதன் காரணமாகவே, இவருக்கு முதன் முறையாக தேசிய அணியுடன் இணைவதற்கான வாய்ப்பு கிட்டியுள்ளது.

## அரசிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு துரோகமிழைக்கும் வகையில் அமைந்துள்ள கூட்டு ஒப்பந்தம் அலரி மாளிகையில் வைத்துக் கைச்சாத்திடப்பட்டமைக்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்து அதிருப்தியை வெளியிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் அரசிலிருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீன அணியாகச் செயற்படுவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தமக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வேண்டும் என வலியுறுத்திப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் போராட்டங்களில் ஈடுபட்டுவந்தனர். எனினும், தொழிலார்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு கூட்டு ஒப்பந்தம் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

அதுவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் இந்த உடன்படிக்கை கைச் சாத்திடப்பட்டமைகுறித்துபலகோணங்களில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வோம் எனப் பொதுநிர்வாக இடர்முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு, கிழக்கை அபிவிருத்தி செய்வதற்கு உதவுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசிடம் கேட்டுக்கொண்டுள்ளது. நாம் அதனை மேற்கொள்வோம். அதற்குத் தேவையான நிதியையும் வழங்குவோம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்களுக்குத் தமிழ் மக்கள் தொடர்ந்தும் வாக்களித்து வந்துள்ளனர். அதனால் மைத்திரிபால சிறிசேன எமது பொது வேட்பாளராகக் களமிறங்கியதால் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகள் அவருக்குக் கிடைத்தன. இந்த வகையில் ஐக்கிய தேசியக் கட்சியென்பது அனைத்து இன, மத மக்களையும் கொண்ட கட்சியாகும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவசியமான நேரத்தில் சிறந்த பொருத்தமான ஒரு வேட்பாளரைநாம்தீர்மானிப்போம். வெளியிலிருந்து வேட்பாளரொருவரைக் கொண்டு வருவது ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கமல்ல. நேரம் வரும்போது நாம் சரியான முடிவை எடுப்போம்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதாகக் கடந்த தேர்தல்களின்போது நாம் உறுதியளித்திருந்தோம். அரசமைப்பைப் பற்றி பலரும் பேசினர். 13+ பற்றி மஹிந்த பேசினார். தற்போதுள்ள அரசமைப்பில் சில சில திருத்தங்கள் அவசியமென்பதை எவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும். புதிய அரசமைப்பொன்றைக் கொண்டு வரப் போவதில்லை. எனினும் அரசமைப்புத் திருத்தம் தொடர்பான யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டுவருகின்றன. இது தொடர்பில் எவரும் தமது யோசனையை முன்வைக்கலாம். கருத்துக்களையும் கூறலாம். சிலர் இதில் உள்ளடக்கப்படும் விடயங்கள் தொடர்பில் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். அரசமைப்பு இன்னும் சட்டமாக்கப்படவில்லை. அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றுவதென்றால் 2/3 பெரும்பான்மை அவசியம். பிரதான கட்சிகள் இரண்டும் இணங்கினால் மாத்திரமே 2/3 பெறமுடியும் . இது தொடர்பில் எவரும் வீணே பயங்கொள்ளத் தேவையில்லை – என்றார். (ஐ)

## காங்கேசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி காங்கேசன்துறை வருகிறார்.

இந்தத் தகவலை அமைச்சர் சாகலரத்நாயக்கதெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறைத் துறைமுகம் 2021ஆம் ஆண்டளவில் பொருள்களை எடுத்துச் செல்லக் கூடிய கப்பல் சேவையைக் கொண்ட துறைமுகமாக மாற்றப்படும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

இந்தியாவிடம் இருந்து சலுகை அடிப்படையில் கிடைத்த நான்கு கோடி 50 இலட்சம் அமெரிக்க டொலர்களைப் பயன்படுத்தி அபிவிருத்தித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றது.

அபிவிருத்தி வேலைத்திட்டத்தைத் துரிதப்படுத்துவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி காங்கேசன்துறை வருகிறார்.

காங்கேசன்துறை துறைமுகம் தற்சமயம் இலங்கைக் கடற்படையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. புதிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், புதிய வாயில் ஒன்று அமைக்கப்படவுள்ளது எனவும் அமைச்சர் சாகல ரத்நாயக்க மேலும் தெரிவித்தார். (ஐ)

## வடக்கிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பென் எமர்ஸன் தெரிவித்துள்ளார்.

கடந்த 2017 ஆம் ஆண்டு இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த அவர் பயங்கரவாதத்தை ஒழிக்கும்போது மனித உரிமைகள் பின்பற்றப்பட்டதா என்பது தொடர்பில் ஆராய்ந்திருந்திருந்தார்.

தனது பயணம் தொடர்பான அறிக்கையை அவர் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 40 ஆவது கூட்டத் தொடருக்காக பென் எமர்ஸன் சமர்ப்பித்துள்ளார்.

அதில் அவர் கூறியுள்ளவை வருமாறு:–

இலங்கையில் விரைவாக பயங்கரவாதம் நீக்கப்பட்டு அதற்கு பதிலாக உருவாக்கப்படுகின்ற புதிய சட்டம் சர்வதேசத் தரங்களுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும்.

மேலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பில் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அவர்களின் தண்டனைகள் தொடர்பான பொறிமுறையொன்று அவசியம்.

அதேபோன்று சிறுபான்மையினருக்கு எதிரான கருத்துக்கள் தொடர்பில் ஆராயவேண்டும். அந்தவகையில் வடக்கிலிருந்து முழுமையாக இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும்.

ஆகையால் பாதுகாப்புத்துறை முழுமையாக மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டியது அவசியம் – என்று தெரிவித்துள்ளார். (ஐ)

## உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

எதிர்வரும் மார்ச் மாதம் இடம் பெறவுள்ள ஜெனீவாக் கூட்டத் தொடரில் இலங்கைக்குக் கால அவகாசம் வழங்கப்படுமாயின் அது நல்லாட்சிக்கான வழிகோலலாக அமையும்.

வழங்கப்படும் கால அவகாசமானது இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்களுக்குத் தீர்வு காண்பதற்கும் நல்லாட்சி அரசின் நடவடிக்கைகளை முன்னகர்த்திச் செல்வதற்கும் உதவும்.

அத்துடன் இதுவரையான காலப்பகுதியில் நல்லாட்சி அரசால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவுகளை ஆராய்ந்து பார்ப்பதற்கும் இந்தக் கால அவகாசம் துணைபுரியும் – என்றுள்ளது. (ஐ)

## துப்பாக்கிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து, நீரில் மூழ்கி இரு இளைஞர்கள் உயிரிழந்தனர். இதையடுத்து, கடற்படையினருக்கும், அப்பகுதி பொதுமக்களுக்கும் இடையில் நடந்த மோதல்களில் 12 கடற்படையினர் காயமடைந்தனர்.

மண் அகழ்வில் ஈடுபட்ட மூவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் அந்த இளைஞர்கள் மூவரும் கடலில் பாய்ந்து மூழ்கியுள்ளனர். இதில் ஒருவர் தப்பினார். இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். இரு இளைஞர்களும் கிண்ணியா இடிமன் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகிறது.

இதனையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் ஏற்பட்ட மோதலில் 12 கடற்படையினர் காயமடைந்துள்ளனர் எனக் கடற்படைப் பேச்சாளர் லெப்டினன்ட் கொமாண்டர் இசுரு சூரிய பண்டார தெரிவித்தார்.

கிண்ணியா – பாலாறு பாலத்துக்கு அண்மையில் சட்டவிரோதமான மணல் அகழ்வு தொடர்பாக நேற்றுக் காலை 10 மணியளவில் கிடைத்த தகவலுக்கமைய கடற்படையினர் அந்தப் பகுதிக்கு விரைந்துள்ளனர். இதையடுத்தே கடற்படையினர் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அப்போது, மூவர் ஆற்றில் பாய்ந்து தப்பிச் செல்ல முற்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் தப்பி சென்றுள்ள நிலையில் இருவர் காணாமற் போயுள்ளனர். அவர்களைத் தேடும் பணிகளைக் கடற்படையினர் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து பாலாறு பாலத்துக்கு அண்மையில் கடற்படையினருக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் போராட்டத்தில் ஈடுப்பட்டனர். இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் கடற்படையினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. நிலைமையைக் கட்டுப்படுத்த வான் நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகக் கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

அதேபோன்று கிண்ணியா பொலிஸாரும் விடே அதிரடிப் படையினரும் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டனர். இதன்போது 12 கடற்படையினர் காயமடைந்துள்ளனர், இதில் படுகாயமடைந்த 04 பேர் மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், இப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், கிண்ணியா பொலிஸாருடன் பொலிஸ் அதிரடிப்படையினர் ஒன்றிணைந்து கலவரத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். (ஐ)

## சவேந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டுகளை உள்ளடக்கிய ஆவணம் ஒன்றைத் தென்னாபிரிக்காவைத் தளமாக கொண்ட சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பு வெளியிட்டுள்ளது.

137 பக்கங்களைக் கொண்ட இந்த ஆவணத்தில், மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் மற்றும் அவற்றுக்கான ஆதாரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. போர்க் குற்றங்கள் தொடர்பான படங்கள், குறுஞ்செய்திகள், சாட்சிகளின் வாக்குமூலங்கள் ஆகியன இதில் இடம்பெற்றுள்ளன. இதனடிப்படையில் சவேந்திர சில்வா பதவிநீக்கம் செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## ஊடக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்ட குற்றவாளிகள் இன்னமும் சுதந்திரமாக நடமாடுகின்றனர். அவர்களுக்கு எதிராகச் சட்டம் செயற்படவில்லை. எனவே, இந்த விடயத்தில் தேசிய பொலிஸ் ஆணைக்குழு தலையிட்டு நீதியைப் பெற்றுக்கொடுக்கவேண்டும்.

– இவ்வாறு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம் 8 ஊடக அமைப்புகள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கூட்டாகக் கோரிக்கை விடுத்தன.

ஊடக அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் தேசிய பொலிஸ் ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம், சுதந்திர ஊடக அமைப்பு, ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், இலங்கை இளம் ஊடகவியலாளர்களின் சங்கம், சமூக வலைத்தள ஊடக செயற்பாட்டாளர்கள், ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள் ஆகிய 8 ஊடக அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் சார்பில் அதன் தலைவர் சட்டத்தரணி பி.எச். மனதுங்க, செயலாளர் டி.எம்.எஸ். திஸாநாயக்க உட்பட மூவர் கலந்து கொண்னர்.

இதன்போது ஊடகவியலாளர்களுக்குஎதிராககடந்தகாலங்களில் கட்டவிழ்த்துவிடப்பட்டிருந்த அடக்குமுறைகளைப் பட்டியலிட்டுக்காட்டிப்பேசிய ஊடக அமைப்புகளின் பிரதிநிதிகள், பொலிஸ் ஆணைக்குழுவிடம் கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

இலங்கையில் ஊடகவியலாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். சிலர் கடத்திக் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். மேலும், சிலர் பல்வேறு வழிகளிலும் சித்திர வதைகளுக்குட்படுத்தப்பட்டுள்ளனர். ஊடக நிறுவனங்கள் தீயிட்டுக்கொளுத்தப்பட்டன; தாக்குதல் நடத்தப்பட்டன.

ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டால் அதற்கு எதிராகப் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்த விடயத்தை நீதிமன்றம் கொண்டு செல்ல வேண்டும். ஆனால், ஊடகவியலாளர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் தொடர்பான ஒருசில முறைப்பாடுகளைத் தவிர ஏனையவை இன்னும் நீதிமன்றத்திடம் கொண்டு செல்லப்படவில்லை.

ஆரம்பக்கட்ட பொலிஸ் விசாரணைகள்கூட இன்னும் ஆரம்பமாகவில்லை. அரசியல் தலையீடே இதற்குப் பிரதான காரணமாகும். நீதிமன்ற விசாரணையிலுள்ள வழக்குகள் தொடர்பான விசாரணைகள்கூட ஸ்தம்பிதமடைந்துள்ளன.

ரூபவாஹினிக்குள் புகுந்து முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தாக்குதல் நடத்தினார். அது தொடர்பான சாட்சியங்கள் இருக்கின்றன. அதேபோல், அம்பாந்தோட்டையில் பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஊடகவியலாளரைத் தாக்கினார். அது தொடர்பான வீடியோவும் இருக்கின்றது. ஆனால், அவர்களுக்கு எதிராகச் சட்டம் செயற்படவில்லை. மாறாகப் பதவி உயர்வே வழங்கப்பட்டுள்ளது. பிரகீத் எக்னெலிகொட கடத்தலுடன் தொடர்புடைய படை அதிகாரி ஒருவருக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தோம். ஆனால், அந்தக் கோரிக்கை இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

ஊடகவியலாளர்களுக்கு நீதி நிலைநாட்டப்படும் எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், தாம் வழங்கிய வாக்குறுதிகளை இன்று மறந்து செயற்படுகின்றனர்.

எனவேதான், இன்று பொலிஸ் ஆணைக்குழுவிடம் வந்தோம். குறைந்தபட்சம் ஊடகவியலாளர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டு விவரங்களை முழுமையாக வெளியிடுவதற்கு பொலிஸ் ஆணைக்குழு தலையிட வேண்டும். பொலிஸ் விசாரணைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளமை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட வேண்டும் என்று ஊடக அமைப்புகளின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், மகஜரொன்றையும் பொலிஸ் ஆணைக்குழுவிடம் அவர்கள் கையளித்தனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர்.

பொலிஸ்மா அதிபரிடம் விவரம் கோரப்படும். தகவல்களைக் கேட்டறிந்த பின்னர் அடுத்தகட்ட சந்திப்புக்கு அழைக்கின்றேன் என்றார்.

இதையடுத்து 8 ஊடக அமைப்புகளின் பிரதிநிதிகளும் கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்துக்கும் சென்று அங்கு இருந்த அதிகாரியிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர். (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சியின் வேட்பாளர் யார் என்பது தொடர்பிலேயே தற்போது அதிகமாகப் பேசப்படுகின்றது.

எமது வேட்பாளரின் குடியுரிமைப் பிரச்சினைகள் எல்லாம் தீர்க்கப்பட்டுள்ளன. இந்த அரசு ஆட்சி பீடத்தில் ஏறிய காலத்தில், மஹிந்த ராஜபக்ஷ மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். பஸில் ராஜபக்ஷ தான் இவற்றையெல்லாம் ஒருங்கிணைந்து வழிநடத்திச் சென்றார். அந்த வகையில், இந்த அரசியல் போராட்டத்துக்கு உரிய தரப்பினர் உரிய நேரத்தில் களமிறங்குவர்.

எம்மிடமுள்ள சில பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சிக்கு எமது வேட்பாளர் தொடர்பில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டுக் குடியுரிமை இருப்பதால் கோட்டாபய ராஜபக்ஷவும் பஸில் ராஜபக்ஷவும் போட்டியிட முடியாது என்று கூறுகிறார்கள். இவ்வாறு எமது வேட்பாளர் குறித்தே அதிக கேள்விகள் எழுந்துள்ளன.

எனினும், எமது தரப்பின் குடியுரிமைப் பிரச்சினையும், வேட்பாளர் பிரச்சினையும் தற்போது தீர்க்கப்பட்டுவிட்டன. யார் வேட்பாளர் என்று இப்போதே எம்மால் கூறமுடியாது. யார் சரியான நபரோ, அவர் உரிய நேரத்தில் களமிறங்குவார் – என்றார். (ஐ)

காலைக்கதிர்
Kalaikkathir



# இலங்கையை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தக் கோரி தொடர்ந்தும் பிரிட்டனில் பிரசாரம்!

## அந்நாட்டு எம்.பிக்களுடன் நாடு கடந்த தமிழீழ அரசு சந்திப்பு







மனித உரிமைகள் மீறல்கள், யுத்தக் குற்றங்கள் ஆகியன தொடர்பில் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தும் வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலால் இலங்கைக்கு வழங்கப்பட்ட இரண்டு வருடகால அவகாசம் எதிர்வரும் மார்ச் மாதம் 19 ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 40 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 22 ஆம் திகதி வரையில் இடம்பெறவுள்ளது.

இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து மிகவும் முக்கியமான தீர்மானங்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் எடுக்கப்பட உள்ள நிலையில்–

இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்திற்கு பாரப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறும் இது தொடர்பாக நாடாளுமன்ற விவாதம் ஒன்றை பிரித்தானிய நாடாளுமன்றத்தில் ஒழுங்கு செய்யுமாறும் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வருகின்றது

அந்த வகையில் கடந்த 18 ஆம் திகதி நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் மனித உரிமைகள், தொகையான கொடூரங்கள் மற்றும் இனவழிப்புக்கெதிரான அமைச்சர் பத்மநாபன் மணிவண்ணனின் வழிப்படுத்தலில் நுஜிதன் இராசேந்திரம் மற்றும் பொன்ராசா புவலோஜன் ஒழுங்கமைப்பில் துசியந்தன் பாலசுந்தரம், அசாந்தான் தியாகரசா, சயந்தன் குலசந்திரதாசன்,சயந்தசர்மா ஆகியோர் கொண்ட குழு பிரிட்டிஷ் எம்.பிக்களைச் சந்தித்துப் பேசியது.


Mitcham Morden தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான Siobhain McDonald அவர்களையும், Crawley தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் Hentry Smith அவர்களையும், Lewsiyaது தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் Vickey Foxcroft அவர்களையும், Folkestone and Hythe தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் Damian Noel Thomas Collins அவர்களையும் இக்குழு சந்தித்து உரையாடியது.

இலங்கையில் யுத்த காலத்தின் போது புரியப்பட்ட போர்க்குற்றங்கள், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையில் 2015 செப்டம்பரில் 30/1 என்ற தீர்மானம் கொண்டு வரப்பட்டு அதில் கூறப்பட்ட கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு இரண்டு வருடகால வழங்கியபோதும் வழங்கப்பட்ட காலத்திற்குள் வாக்குறுதியளித்த விடயங்களை முழுமையாக நிறைவேற்ற தவறிவிட்டமையால் 2017 மார்ச் இல் 34/1 என்ற தீர்மானத்தின் மூலம் இலங்கை அரசிற்கு மேலும் இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டது. பொறுப்பு கூறல், நீதி வழங்கல் தொடர்பில் இலங்கை மற்றும் பன்னாட்டு நீதிபதிகள் அடங்கிய விசாரணையாளர்களை உள்ளடக்கிய ஒரு கலப்பின நீதிமன்றத்தை ( Hybrid Court) உள்நாட்டில் உருவாக்க தவறி விட்டதுடன் சர்வதேசத்தையும் தமிழ் மக்களையும் தொடர்ச்சியாக இலங்கை ஏமாற்றி வருகின்றது. இது குறித்தும் வரும் மார்ச் மாதத்திற்குள் 34/1 என்ற தீர்மானத்தை நிறைவேற்ற தவறும் பட்சத்தில் ஐ.நா. மனித உரிமை கவுன்ஸில் ஆரம்பிக்க இருக்கின்ற கூட்டத் தொடரில் இலங்கையின் செயலின்மை காரணமாக ஐ.நா மனித உரிமை மன்றம் இலங்கையை ஐ.நா பொதுப் பேரவையின் பார்வைக்கு அனுப்பி, பொதுப் பேரவை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தின் பார்வைக்கு அனுப்புமாறு ஐ.நா பாதுகாப்பு மன்றத்துக்குப் பரிந்துரை செய்ய வேண்டுமென பிரித்தானிய அரசாங்கத்திடம் அழுத்தம் கொடுக்குமாறும் இக்கோரிக்கைக்கு ஆதரவு வழங்குமாறும் சந்திப்புக்களின் போது நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இலங்கையிலுள்ள பிரச்சினைகளை தொடர்ச்சியாக கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லுமாறு வழங்கப்பட்ட மனுவை ஏற்றுத் தாம் அதனை ஆதரிக்கின்றனர் என உறுதி அளித்தனர். அத்துடன் Siobhain McDonagh அவர்களால் வரும் வாரத்தில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில் நிறுத்துவது தொடர்பான நாடாளுமன்ற விவாதம் ஒன்று ஏற்பாடு செய்வதற்குரிய உத்தரவாதம் அளிக்கப்பட்டது. தமிழர்களுக்கெதிராக புரியப்படுகின்ற சமகால வன்முறைகளான கைதுகள், சித்திரவதை, தமிழர்களுக்கு சொந்தமான காணிகள் அபகரிப்பு, தமிழர்கள் பெருமளவில் வாழ்கின்ற பகுதிகளான வடக்கு கிழக்கு மாகாணங்களில் பெரும் எண்ணிக்கையான இலங்கை இராணுவம் நிலை கொண்டுள்ளமை, மக்களது அன்றாட வாழ்க்கையில் இராணுவத்தின் தலையீடு, அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரியும் காணாமல் போகடிக்கப்பட்டோர் விவகாரத்தில் உண்மையைக் கண்டறியும் படியும் நடத்தப்படுகின்ற போராட்டங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கண்டும் காணாமல் இருக்கின்ற நிலைப்பாடு போன்ற விடயங்களும் இச் சந்திப்பின் போது கலந்துரையாடப் பட்டன.

# இந்து முறைப்படியும் நடந்தது மஹிந்தவின் மகன் திருமணம்!





எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷவின் கடைசிப் புதல்வரான ரோஹித ராஜபக்ஷ மற்றும் டட்யானா லீ ஆகியோர் நேற்று இந்து முறைப்படியும் திருமணம் செய்து கொண்டனர்.

பௌத்த மற்றும் கிறிஸ்தவ மதங்களைச் சேர்ந்த ரோஹித – டட்யானா இருவரும் கடந்த 24ஆம் திகதி மெதமுலன வீரக்கெட்டிய கிராமத்தில் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டனர்.

முதலில் பௌத்த முறைப்படி திருமணத்தில் இணைந்த இருவரும் நேற்று முன் தினம் பம்பலப்பிட்டி தூய மரியன்னை தேவாலயத்தில் கிறிஸ்தவ முறைப்படியும்திருமணம்செய்துகொண்டனர்.

இந்த நிலையில் தமிழ்ப் பாரம்பரியத்துக்கு அமையப் புதுமணத் தம்பதியினர் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கொழும்பு மயூராபதி அம்மன் ஆலயத்தில் திருமணத்தைப் பதிவு செய்துள்ளனர்.

அத்தோடு மணமக்களும், அவர்களது குடும்பத்தினரும் தமிழர் கலாசார உடையணிந்து சிறப்பு வழிபாட்டில் ஈடுபட்டனர். (ஐ)

உ
அம்பாள் துணை

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

மேற்கு வாசல் கோபுர கும்பாபிஷேகம்



தை மாதம் 16ஆம் நாள் இன்று (30.01.2019) புதன்கிழமை தசமி திதியும் அனுச நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் குரு கூடிய காலை 9.25 மணிமுதல் 10.50 மணி வரையான மீன லக்கின சுப முகூர்த்தத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மேற்கு வாசற் கோபுரத் திற்கு மஹாகும்பாபிகேம் நிகழ திருவருள் கைகூடியுள்ளது. அத்தருணம் அம்பாள் அடியார்கள் ஆசார சீலர்களாக வருகை தந்து அம்பாள் அனுக்கிரகத்தை பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

நிர்வாக சபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.01.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.